தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாளை புறக்கடை நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி

காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையத்தில் புதன்கிழமை புறக்கடை நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி வகுப்பு புதன்கிழமை (டிசம்பர் 18) நடைபெற உள்ளது.

இது குறித்து உழவர் பயிற்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் வெங்கட சுதாகர ராவ் வெளியிட்ட அறிக்கை:

நம் நாட்டில் கோழி வளர்ப்புத் தொழில் வளர்ச்சியானது ஆராய்ச்சி மற்றும் சீரிய திட்டங்களின் செயல்பாட்டினால் ஏற்பட்டுள்ளது. மேலும், உயர்தர வீரிய ரகக் கோழிக் குஞ்சுகள், அறிவியல் முறையிலான பராமரிப்பு, சரிவிகித உணவு, ஆரோக்கியம் மற்றும் முதலீடு ஆகியவை கோழிப் பண்ணை வளர்ச்சிக்கு முக்கியக் காரணிகளாகும். இப்போது கோழியின் இறைச்சிக்கும், முட்டைக்கும் விருப்பமும் தேவையும் அதிகரித்துள்ளது. இறைச்சியின் மிருதுவான தன்மை, மணம் மற்றும் ஊட்டச்சத்துக்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கோழிப் பண்ணையாளர்கள் தங்கள் பணிகளை கவனமாகவும் திறம்படவும் செய்வதால்,  லாப சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, கோழி வளர்ப்புத் தொழிலை நாட்டு வளர்ச்சிக்கும், சுயவேலை வாய்ப்பை அதிகரித்திடவும், புரதச்சத்து நிறைந்த ஊட்டச்சத்துப் பொருள்கள் உற்பத்தியை உயர்த்திடவும், பண்ணையாளர்கள் புதிய தொழிற்நுட்பங்களில் பயிற்சி பெற்றுப் பயனடைய வேண்டும். அந்த வகையில் புறக்கடை நாட்டுக் கோழி வளர்ப்பு பற்றிய ஒரு நாள் இலவசப் பயிற்சி  வகுப்பு புதன்கிழமை (டிசம்பர் 18) காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்க ஆர்வமுள்ள அனைவரும் தங்கள் பெயர்களை 044 - 27264019 என்ற தொலைபேசி மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மதுரை சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்ப அனுமதி வழங்க கோரிக்கை**

நடப்பாண்டில் மதுரை அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பை விவசாயிகள் அனுப்ப அனுமதி பெற்றுத்தர மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க மனு கொடுக்கப்பட்டுள்ளது. சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்க மாவட்ட விவசாய அணி சார்பில் அதன் தலைவர் எல்.ஆதிமூலம் கொடுத்துள்ள மனு: சிவகங்கை மாவட்டத்தில் செயல்படும் தனியார் சர்க்கரை ஆலைக்கு மாவட்டத்திலிருந்து சுமார் 8 லட்சம் டன் வழங்கப்படுகிறது. ஆலை நிர்வாகம் கரும்பு கிரையப் பணத்தை வெட்டிய 15 நாளில் தருவதில்லை. கடந்த 4 ஆண்டுகளாக விவசாயிகளிடம் பிடித்தம் செய்த ரூ.40 கோடியை வங்கிக்கு செலுத்தவில்லை. இதனால் கரும்பு வளர்க்க வங்கிகள் கடன் உதவி செய்ய மறுக்கின்றன. தற்போது போர்வெல் கிணறுகள் மூலம் பம்ப் செட் விவசாயிகள் மட்டுமே கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கடும் வறட்சி காரணமாக நிலத்தடி நீர் கீழே சென்று விட்டதால் 5 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிர் கருகி விட்டது. இதனால் 8 லட்சம் டன்னிலிருந்து 3 லட்சம் டன்னாக கரும்பு உற்பத்தி குறைந்துவிட்டது. கடன் உதவியும், கிரையப் பணமும் உடனடியாக கிடைக்காததாலும், கரும்பு சாகுபடியை கைவிட்டு வருகின்றனர்.

கருகிய கரும்புக்கு நஷ்டஈடு பெற்றுத்தர ஆலை நிர்வாகமும் முயற்சி எடுக்கவில்லை. 2013-14ஆம் கரும்பு அரவை பருவம் துவங்கும் காலம் வந்து விட்டது.

விவசாயிகளிடம் ஆலை பிடித்தம் செய்த ரூ.40 கோடியை வங்கிகளுக்கு கட்டாததால் விவசாயிகள் சக்தி சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் கரும்பைத் தர தயக்கம் காட்டி வருகின்றனர். எனவே மதுரை அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பை அனுப்ப தமிழ்நாடு சர்க்கரை ஆலைத்துறை

ஆணையரிடம் அனுமதியை மாவட்ட நிர்வாகம் பெற்றுத்தர வேண்டும் என மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வேளாண் பல்கலை. பேராசிரியருக்கு இளம் விரிவாக்க விஞ்ஞானி விருது**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியர் ச.கார்த்திகேயனுக்கு, "இளம் விரிவாக்க விஞ்ஞானி விருது' வழங்கப்பட்டுள்ளது.

நாகபுரி சர்வதேச விரிவாக்க கல்வி சங்கம் மற்றும் பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் "நீடித்த நிலையான வேளாண்மையில் விரிவாக்கத்தின் பங்கு' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு பெங்களூரில் நடந்தது.

இதில் 300-க்கும் மேற்பட்ட விரிவாக்க விஞ்ஞானிகள் கலந்து கொண்டு தங்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். இதில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (விரிவாக்கம்) பேராசிரியரும், உதவி மக்கள் தொடர்பு அலுவலருமான ச.கார்த்திகேயனுக்கு இளம் விரிவாக்க விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது. ரூ.5,000 ரொக்கம், கேடயம், சான்றிதழ் வழங்கப்பட்டது.பேராசிரியர் ச.கார்த்திகேயன் சமர்ப்பித்த "இ-வேளாண்மை: ஒரு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண் விரிவாக்க முறை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரைக்காக சர்வதேச விரிவாக்க கல்வி சங்கம் சார்பில் விருது வழங்கப்பட்டது. இந்த விருதை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பொது இயக்குநர் எஸ்.அய்யப்பன் வழங்கினார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 63.21 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 63.21 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 825 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கன அடி நீரும், வாய்க்காலில் 1,950 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 8.34 டி.எம்.சி.

**பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.9.44 கோடி ஊக்கத் தொகை**

வேலூர்-திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனம் ரூ.944 கோடியை ஊக்கத் தொகையாக வழங்கவுள்ளது.

இதுகுறித்து ஆவின் நிறுவன பெருந்தலைவர் த.வேலழகன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: பால் உற்பத்தியாளர்கள் நலனை கருத்தில்கொண்டும், பால் உற்பத்தியை அதிகரிக்கவும் 2012-13ஆம் நிதியாண்டில் ஆவின் ஈட்டிய லாபத் தொகையில் 49 ஆயிரத்து 571 பால் உற்பத்தியாளர்கள் பலனடையும் வகையில், பால் உற்பத்தியாளர்கள் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கிய பாலுக்கு அதன் தரத்தின் அடிப்படையில் லிட்டருக்கு 50 முதல் 60 காசு வரை கணக்கீடு செய்து ரூ.5.10 கோடியை ஆவின் வழங்கவுள்ளது.

2012-13ஆம் நிதியாண்டில் ஆவினுக்கு பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம், பால் உற்பத்தியாளர்கள் வழங்கிய பாலுக்குரிய கூடுதல் கொள்முதல் விலையாக ஒரு லிட்டருக்கு 40 காசு வீதம் கணக்கீடு செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ..34 கோடி வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் பால் உற்பத்தியாளர்கள் ஊக்கத் தொகையாக ரூ.9.44 கோடியை பெறவுள்ளனர்.

இனி வருங்காலத்தில் டிசம்பர் 2013 முதல் ஏப்ரல் 14 வரை மாதம்தோறும் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்துக்கு வழங்கவுள்ள பாலின் தரத்தின் அடிப்படையில் ஒரு லிட்டருக்கு 50 முதல் 60 காசு வரை தனியாக கணக்கீடு செய்து பால் பண பட்டுவாடாவுடன், கூடுதலாக தனித்து பால் உற்பத்தியாளர்கள் பலனடையும் வகையில் ரூ.41 லட்சம் வரை வழங்கப்படும்.

பால் உற்பத்தி செலவை குறைக்கும்பொருட்டு, அரசு மானிய அடிப்படையில் ஒரு கிலோ தீவனத்துக்கு ரூ.4 வீதமும், ஒரு கிலோ தாது உப்பு கலவைக்கு ரூ.25 வீதமும், ஒரு கிலோ  சோளப் பசுந்தீவனத்துக்கு ரூ.1 வீதமும், பால்

உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியம் வழங்கி வருகிறது என வேலழகன் தெரிவித்துள்ளார்.

### கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் உண்ணாவிரதம்

கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளை பழிவாங்கும் வகையில் கோழிக்குஞ்சுகள் நிறுவனங்கள் செயல்படுவதாகக் கண்டித்து, தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை உண்ணாவிரதம் இருந்தனர்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற இப்போராட்டத்துக்கு, சங்கத்தின் மாவட்டச் செயலர் எம்.இந்திரன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலர் எஸ்.தயாநிதி போராட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

மாநில கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ஜி.லதா, மாவட்டத் தலைவர் எம்.வேணுகோபால், பொருளாளர் ஏ.சி.வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். அரசுடன் செய்யப்பட்ட முத்தரப்பு பேச்சுவார்த்தை ஒப்பந்தத்தின்படி, கோழிபண்ணைகளுக்கு கோழிகுஞ்சுகள் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் இந்த உண்ணாவிரதத்தில் வலியுறுத்தப்பட்டன.

### விவசாய ஆர்வலர் குழுக்களுக்கு இடுபொருள்கள் விநியோகம்

: திருவண்ணாமலை வட்டத்தைச் சேர்ந்த அட்மா திட்ட விவசாய ஆர்வலர் குழுக்களுக்கு, வேளாண்துறை சார்பில் இடுபொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரும், அட்மா திட்ட இயக்குநருமான நா.பன்னீர்செல்வம் விவசாய ஆர்வலர் குழுக்களுக்கு இடுபொருள்களை வழங்கிப் பேசினார்.

இவ்விழாவில், நேரடி நெல் விதைக்கும் கருவிகளை பவித்ரம் அட்மா மகளிர் சுய உதவிக்குழு, பண்டிதப்பட்டு டான்வாபி பண்ணை மகளிர் குழுக்களுக்கும், விசைத்தெளிப்பான் கருவிகளை பொரிக்கல் அட்மா விவசாய ஆர்வலர் குழு,

மண்புழு உரம் தயாரிப்பதற்கான சில்பாலின்களை பெரியகல்லப்பாடி அட்மா விவசாய ஆர்வலர் குழு, ஆடையூர் மற்றும் சின்னகாங்கியனூர் நீர்வள நிலவள விவசாய ஆர்வலர் குழுக்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் ஆர்.சந்திரசேகர், அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.பெரியசாமி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மு.வெங்கடேசன், பொருள் சிறப்பு அறிஞர் நா.சுகன்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயக் குழுக்களுக்கு வேளாண் கருவிகள் பராமரிப்பு பயிற்சி**

தருமபுரி மாவட்டத்தில் விவசாயக் குழுக்களுக்கு வேளாண் பொறியியல் துறை சார்பில், வேளாண் இயந்திரங்கள், கருவிகள் பராமரிப்புப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிகழாண்டில் தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, பென்னாகரம், அரூர், நல்லம்பள்ளி வட்டாரத்தில் விவசாயக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. 15-16 உறுப்பினர்களை கொண்ட இந்தக் குழுக்களை 4 துணைக் குழுக்களாகப் பிரித்து, வேளாண் இயந்திரங்கள் கையாள்வது, பராமரிப்பது குறித்து 8 நாள்கள் பயிற்சி வழங்கப்படும். பயிற்சியாளர்களுக்கு ரூ.100 உதவித்தொகை, மதிய உணவு, தேநீர் வழங்கப்படும். மேலும், பதிவு செய்யப்பட்ட விவசாயக் குழுக்களுக்கு விலையில்லா வேளாண் இயந்திரங்களாக பவர் டில்லர், நெல் நாற்று நடும் இயந்திரம், களையெடுக்கும் கருவி, விதை விதைக்கும் கருவி ஆகியவை வழங்கப்படும்.

இந்தக் குழுக்களில் சேர, 18-35 வயதுக்குள்பட்ட சிறு, குறு விவசாயிகளாக இருத்தல் வேண்டும். பதிவேடுகளைப் பராமரிக்கத் தேவையான கல்வித் தகுதி, உடல் திறன் தகுதி இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விவசாயிகள் வருகிற 30-ஆம் தேதிக்குள் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, இணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம் தருமபுரி, தொலைபேசி: 04342-230948 மற்றும் உதவி செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை, கோவிந்தசாமி நகர், அரூர். தொலைபேசி 04346-221316 ஆகிய முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு**

பால் உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ள போராட்டத்துக்கு தமிழ்நாடு கள் இயக்கம் ஆதரவு தெரிவிக்கிறது என்றார் அந்த இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் செ. நல்லசாமி.இதுகுறித்து அவர் திங்கள்கிழமை மேலும் கூறியது:

தமிழகத்தில் பசும்பால் கொள்முதல் விலை ரூ. 20, எருமைப்பால் ரூ. 26 என உள்ளது. ஒரு லிட்டர் நீரை மாநில அரசு ரூ. 10-க்கும், மத்திய அரசு ரூ. 15-க்கும் விற்கிறது. ஆனால் பாலின் விலை மட்டும் உயர்த்தப்படவில்லை. இதனால், பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.30-ம், எருமைப்பாலுக்கு ரூ. 40-ம் கேட்டு பால் உற்பத்தியாளர்கள் வரும் ஜன.1 முதல் பாலை நிறுத்தும் போராட்டத்தை அறிவித்துள்ளனர். இதற்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம். வறட்சியால் 70 லட்சம் தென்னைகள், 20 லட்சம் பனைகள், 1 லட்சம் மாமரங்கள் கருகிவிட்டன. 2 கோடி தென்னைகளில் காய்ப்பு நின்றுவிட்டது. இவற்றிற்கு அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். ஓரினச் சேர்க்கைக்கு உரிமை கேட்பது பாரம்பரிய பண்பாட்டிற்கு எதிரானது. இபிகோ 377 பிரிவின்படி அது தண்டனைக்குரிய குற்றம். இதை நீக்கினால் இல்லறம் விலங்கு போக்கிற்கு மாறும்.

கள்ளை இறக்குவதும், பருகுவதும் அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு கொடுத்திருக்கும் உணவு தேடும் உரிமை. இதனடிப்படையில் வரும் ஜன.21 முதல் கோவை மாவட்டம், சூலூர் அருகே அருகம்பாளையத்தில் கள் இறக்கும் போ0ராட்டத்தில் இறங்குவோம். இந்தப் போராட்டம் விரிவுபடுத்தப்படும்.

கள் உடலுக்குத் தீங்கானது என யாராவது நிரூபித்தால் ரூ.10 கோடி பரிசு வழங்கப்படும். கரும்புக்கு விலை நிர்ணயிப்பது தொடர்பாக முத்தரப்புக் கூட்டம்

நடத்தி, உ.பி-யில் வழங்கப்படுவதுபோல டன்னுக்கு ரூ. 2850 வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார். கரூர் மாவட்ட கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் ஆடிட்டர் நல்லசாமி, கள் இயக்க அமைப்பாளர் தமிழ்சேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**மாட்டுச்சந்தைக்கானதடையை நீக்க கோரிக்கை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தடை விலக்கி, கால்நடை சந்தையை மீண்டும் நடத்த அனுமதிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

இதுதொடர்பாக புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை அளித்த மனு விவரம்:

மாவட்டத்தில் புதுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய நகராட்சிகளில் நடைபெற்று வந்த வாரச் சந்தைகளில் அதிகளவில் கால்நடைகள் விற்பனை செய்யப்படும். இந்நிலையில், இச் சந்தையில் கால்நடைகள் விற்பனை செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. எனவே, சந்தையை மீண்டும் நடத்த அனுமதி க்க வேண்டுமென அவர்கள் மனுவில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**கோமாரி நோய்  தாக்கி மாடுகள் சாவு**

திண்டிவனத்தை அடுத்த கீழ்பேட்டை ஊராட்சியில் கோமாரி நோய் தாக்கி இரண்டு மாடுகள் இறந்துள்ளன.

அப்பகுதியைச் சேர்ந்த குருநாதன், குப்பம்மாள் ஆகியோரின் மாடுகள் கடந்த சில நாள்களாக கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு  வந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், அந்த இரண்டு மாடுகளும் திடீர்ரென இறந்தன.

இதையடுத்து மரக்காணம் கால்நடைத் துறை மருத்துவர்கள் அப்பகுதியில் முகாமிட்டு கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் விரிவாக்க மையங்களில் "ஆன் லைன் பில்லிங்' அமல்

திண்டுக்கல்:ஒருங்கிணைந்த இடுபொருள் வினியோக மேலாண்மை திட்டத்தின் கீழ் தமிழகத்தில், நீலகிரி மாவட்டம் தவிர மீதமுள்ள 379 வட்டார மையங்களில், "ஆன்லைன் பில்லிங் சிஸ்டம்' நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், விதைகள் என, எதை விற்பனை செய்தாலும் கம்ப்யூட்டர் "பில்' உடன் வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.இதற்காக, ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்து இரண்டு கிட்டங்கி மேலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிப்பர். அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களும் ஆன் லைனில் இணைக்கப்பட்டுள்ளன. எளிதில் கையாளும் வகையில் முதற்கட்டமாக திருச்சி, திருவாரூர், தஞ்சாவூர், விருதுநகர், ஈரோடு, ராமநாதபுரங்களில் உள்ள அலுவலர்களுக்கு "இன்டெர்நெட்' இணைப்புடன் கையடக்க கருவி வழங்கப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களுக்கு அடுத்தடுத்து வழங்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் முதல் "ஆன்லைன் பில்லிங்' நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

### விவசாயிகள் பணி தொடர "மொபைல்' மூலம் தகவல்

திண்டுக்கல்:மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளதால் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், மனம் தளராமல் உழவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு எஸ்.எம்.எஸ்., "வாய்ஸ் மெசேஜ்' மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக திண்டுக்கல் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் வேளாண் பணிகள் முடங்கின. வறட்சி நிவாரணம் முழுமையாக கிடைக்காததால்,

விவசாயிகள் விரக்தியடைந்தனர். இதனால், நடப்பு ஆண்டிலும் சாகுபடி பரப்பளவு குறைவதற்கான வாய்ப்பு அதிகரித்தது. இந்நிலையில் ஓரளவிற்கு பெய்த பருவ மழை காரணமாக உழவு பணிகளை துவக்குவதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் விவசாயிகள் உள்ளனர்.இதற்கு பதில் அளிக்கும் வகையில் வேளாண் மையங்களில் உள்ள அலுவலர்கள், தங்களிடம் பதிவு செய்துள்ள விவசாயிகளின் மொபைல் எண்களில் மழை நீடிப்பதற்கான வாய்ப்பு உள்ளதால், மனம் தளராமல் உழவு பணிகளை தொடருமாறு எஸ்.எம்.எஸ்., "வாய்ஸ் மெசேஜ்' மூலம் தகவல் அனுப்பி வருகின்றனர்.

**மல்லிகை சாகுபடியில் ஒரு ஆண்டிற்கு லாபம் ரூ.3 லட்சம் இதற்கு நெல் விவசாயிகள் மாறினால் மணக்கும் வாழ்வு**

மண்டபம்:ஒரு பகுதியில் நெல் விவசாயம், மழையின்றி பொய்த்து வருகிறது; இன்னொரு பகுதியில் இயற்கை சீற்றம், இலங்கை கடற்படை கெடுபிடியால், கடல் விவசாயத்தில் ஈடுபட்டோர் பரிதவிக்கின்றனர். ஆனால், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் கடற்கரை பகுதியை சுற்றிலும் உவர் நிலம், உப்பு காற்று என எதிர்மறைகளை மீறி, மல்லிகை விவசாயம் மணக்கிறது. ஒரு முறை சாகுபடி செய்தால், பல தலைமுறைகளுக்கு, ஆண்டுக்கு 3 லட்ச ரூபாய் வீதம் லாபம் கொட்டி தருகிறது. மாவட்டத்தில் ஒரு லட்சத்து 28 ஆயிரம் எக்டேரில் நெல் விவசாயம் நடக்கிறது. பிற பயிர்கள் 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட எக்டேரில் சாகுபடி செய்யப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை பொய்த்து, விவசாயம் கையை கடித்து வருகிறது. நிவாரணம், பயிர் இன்சூரன்ஸ் தொகை என விவசாயிகள் அலைபாய்கின்றனர். ஒரு ஏக்கரில் 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்தாலும், நெல் தருவதோ ரூ.30 ஆயிரம். இதுவும் முழுமையாக விளைந்தால் தான்.

இப்படி வாழ்க்கையை, கண்ணீரில் ஓட்டி வரும் விவசாயிகள் இருக்கையில்,

மணக்கும் மல்லிகை சாகுபடியில் சத்தமின்றி, அதிக லாபம் ஈட்டி வருகின்றனர் மண்டபம், நொச்சியூரணி, தங்கச்சிமடம் பகுதி விவசாயிகள். மண்டபம் விவசாயி நம்புராஜன் கூறியதாவது: மல்லிகை சாகுபடிக்கு ஏற்ற மண் வளம், சீதோஷ்ண நிலை இங்குள்ளது. மறவர் தெருவில் 20 ஏக்கரில், 300 குடும்பங்கள், மூன்று தலைமுறையாக மல்லிகை சாகுபடி செய்கின்றனர். ஜனவரி முதல் ஏப்ரல் வரை பூக்ள் வளர்கின்றன. மே முதல் ஆகஸ்ட் வரை பறிக்கப்படுகின்றன.

ஒரு முறை செடி நட்டால் பல தலைமுறைக்கு வருமானம் கொட்டும். ஓராண்டில் தலா நான்கு மாதங்களுக்கு பூ பறிப்பு, தலைப்பு, பதியன் விற்பனை என ஒரு சென்ட் நிலத்தில் ஆண்டுக்கு ரூ.3000 வீதம், ஒரு ஏக்கருக்கு, 3 லட்ச ரூபாய் லாபம் கிடைக்கும். பிற ஊர், பூக்கள் வெளிறிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். மண்டபம் மல்லிகை தூய வெள்ளை, தனி வாசனையுடன், பருமனாக இருக்கும். இங்கு பறிக்கப்படும் பூக்கள், சென்ட் தயாரிக்க வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆண்டுக்கு 60 டன் பூக்கள்

தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கங்காதரன் கூறியதாவது: மாவட்டத்தில் 150 ஏக்கரில் மல்லிகை சாகுபடி நடந்து வருகிறது. இதில், 60 சதவீதம், "பதியன்'(குச்சி) உற்பத்தி நடந்து வருகிறது. மீதமுள்ள 40 சதவீதம், பூ சாகுபடிக்காக வளர்க்கப்படுகிறது. குண்டுமல்லி, ஜாதிமல்லி, பிச்சிப்பூ ஆகிய 3 வகைகள் பயிரிடப்படுகின்றன. ஆண்டுதோறும் ஒன்றரை முதல் 2 கோடி பதியன்கள், தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. நமது மாவட்டத்தில் குறைந்த பரப்பளவில் மல்லிகை சாகுபடி செய்வதால், புவிசார் குறியீடு கிடைக்க வாய்ப்பில்லை. இதற்கு முயற்சிக்கவும் இல்லை. சாகுபடி பரப்பளவை அதிகரிக்கும் வகையில், மாவட்ட மல்லிகை பூ விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு 1000 கிலோ வீதம், ஆண்டுக்கு 60 டன் வரை மல்லிகை பூக்கள் கிடைக்கிறது, என்றார்.

**படமாத்தூர் ஆலைக்கு கரும்பு வழங்க மறுப்பு அலங்காநல்லூர் ஆலைக்கு வழங்க முடிவு**

சிவகங்கை:சிவகங்கை அருகே படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், விவசாயிகள் பெற்ற கடன் தொகை,ரூ.40 கோடியை வங்கிக்கு செலுத்தாததால், கரும்புகளை அலங்காநல்லூர் ஆலைக்கு வழங்க, கரும்பு விவசாயிகள் முடிவு செய்து, கலெக்டரிடம் மனு அளித்துள்ளனர். ராமநாதபுரத்தில் கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி உள்ளிட்ட பகுதி, சிவகங்கை மாவட்டத்தில் 8 ஆயிரம் எக்டேரில், கரும்பு நடவு செய்து, ஆண்டிற்கு, 8 லட்சம் டன் கரும்பு உற்பத்தி நடக்கிறது. இக்கரும்புகளை, விவசாயிகள் படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலைக்கு வழங்கி வருகின்றனர். கடந்த 4 ஆண்டுகளாக, விவசாயிகள், கரும்பு பயிருக்காக வங்கிகளில் பெற்ற கடன் தொகை, ரூ.40 கோடியை, வங்கிகளுக்கு தராமல், ஆலை நிர்வாகம் இழுத்தடித்து வருகிறது. வங்கிகள், நடப்பாண்டு கரும்பு பயிர் கடன் வழங்க, மறுத்துவிட்டது. கரும்பு பயிர்களை நடவு செய்ய முடியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

மறுப்பு: இதையடுத்து, சிவகங்கை, ராமநாதபுரம் கரும்பு விவசாயிகள், இனி வரும் காலங்களில், விளைந்த கரும்புகளை, படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலைக்கு வழங்குவதில்லை என முடிவு செய்துள்ளனர்.

மாற்றாக, மதுரை, அலங்காநல்லூரில் உள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பை தர விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். இதற்கான, அனுமதியை சர்க்கரை ஆலைத்துறை கமிஷனரிடம் பெற்றுத்தரக்கோரி, கலெக்டரிடம் விவசாயிகள் மனு அளித்தனர்.

கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் ரகுநாதன், சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்க விவசாய அணி தலைவர் ஆதிமூலம் ஆகியோர் கூறியதாவது: கடந்த 4 ஆண்டுகளாக, வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை, ஆலை நிர்வாகம்

செலுத்தவில்லை. நடப்பு பருவத்தில், வங்கிகளுக்கு பயிர் கடன் கேட்டு சென்றால், தர மறுக்கின்றனர். ஆலை நிர்வாகத்திடம் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும், கடன் தொகையை அவர்கள் செலுத்தவில்லை. எனவே, நடப்பு பருவ கரும்புகளை அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு அனுப்ப முடிவு செய்துள்ளோம், என்றனர். படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""நடப்பு பருவ கரும்புக்கு, உடனே பணம் தரப்படும். படிப்படியாக, வங்கி கடன் அடைக்கப்படும். அதற்குள், மத்திய அரசு வட்டியின்றி ரூ.70 கோடி கடன் தருவதாக உள்ளது. அத்தொகை வந்தவுடன், வங்கி கடன் முழுவதும் அடைத்து, கரும்பு விவசாயிகளுக்கு சிரமமின்றி இருக்கலாம். இது குறித்து, டிச.,24ல் ஆலை நிர்வாகம், கலெக்டர், விவசாயிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும்," என்றார்.

**மணிப்பூரில் துவங்கியது ஆரஞ்சு திருவிழா**



மணிப்பூர் மாநிலத்தில், ஆரஞ்சு திருவிழா துவங்கியுள்ளது.நாட்டின் வட கிழக்கு மாநிலமான மணிப்பூரில், பயங்கரவாதநடவடிக்கைகளை ஒடுக்க, ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் உள்ளது. இச்சட்டத்தால், அப்பாவி இளைஞர்கள் பாதிக்கப்படுவதாக, சமூக ஆர்வலர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், மாநில அமைதி மற்றும் முன்னேற்றத்தை வலியுறுத்தி, மாநில

விவசாயிகளின் சார்பில், ஆரஞ்சு திருவிழா நடத்தப்படுகிறது. 2001ம் ஆண்டு, சாதாரணமாக துவங்கப்பட்ட இத்திருவிழா, 2004ல், மாநில அளவிலான திருவிழாவாக அறிவிக்கப்பட்டது.மாநிலம் முழுவதும் ஆரஞ்சு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அவர்கள் விளைவித்த ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டு மிகப் பெரிய ஸ்டால்கள் அமைத்து, கண்காட்சி நடத்துகின்றனர்.மாநிலத்தில் நடத்தப்படும், 10ம் ஆண்டு ஆரஞ்சு திருவிழா, 14ம் தேதி துவங்கியது. மாநில காங்., முதல்வர், இபோபி சிங், கவர்னர், அஷ்வனி குமார் ஆகியோர் நிகழ்ச்சியின் துவக்க விழாவில் கலந்து கொண்டனர்.இம்மாநிலத்தில், அதிகப்படியான ஆரஞ்சு உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நீலகிரி தேயிலைக்கு கிராக்கி குறைவு பசுந்தேயிலைக்கு விலை சரியும் அபாயத்தால் விவசாயிகள் கவலை

ஊட்டி:நீலகிரி தேயிலைக்கான கிராக்கி, இந்த வார ஏலத்தில், குறைந்து காணப்பட்டதால், மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைக்கு, வர்த்தகர்கள் தள்ளப்பட்டனர்.

நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் வாரந்தோறும், குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில் நடக்கிறது. இந்தாண்டுக்கான 50வது ஏலத்தில், மொத்தம் 18.79 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 12.86 லட்சம், டஸ்ட் ரகம் 6.23 லட்சம் அடங்கும்.வழக்கமாக பங்கெடுக்கும் ரஷ்யா, ஈராக், ஈரான், கிழக்காசிய நாடுகள் உட்பட ஏற்றுமதி வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது; மாறாக, பாகிஸ்தான் வர்த்தகர்கள் மட்டுமே ஓரளவு தேயிலை தூளை வாங்கினர். வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் குறைவாகவே இருந்தது. தரமான தேயிலை தூள் கூட குறைந்த விலைக்கு ஏலம் போயின; மொத்தம் 83 சதவீத தேயிலை தூள் விற்று தீர்ந்தது.

சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறுகையில்,""பொதுவாக, குன்னூர் ஏல மையத்தில், இந்த வாரம் விற்கப்பட்ட ஒரு கிலோ தேயிலை தூளின் சராசரி விலை கிலோவுக்கு 72.40 ரூபாயாக இருந்தது; இது, இந்தாண்டின் மிகக் குறைந்த சராசரி விலை. கடந்தாண்டு இதே 50வது ஏலத்தில், ஒரு கிலோ தேயிலை தூளின் சராசரி விலை 95.86 ரூபாயாக இருந்தது. கடந்தாண்டை ஒப்பிடுகையில் இதே காலகட்டத்தில், ஒரு கிலோ தேயிலை தூளின் சராசரி விலை 24 ரூபாய் குறைந்துள்ளது," என்றார்.

விவசாயிகள் கவலை

தேயிலை ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை தூளின் விலை அடிப்படையில் தான், தேயிலை தூள் உற்பத்திக்கு, விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படும். ஏல மையத்தில் ஏற்படும் இந்த விலை சரிவால், பசுந்தேயிலைக்கான விலை குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது; இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## மகசூலை அதிகரிக்க உயிரியல் பயிர் மருந்து உயிர் உரம் தேவை: வேளாண் உதவி இயக்குனர்

மோகனூர்: "உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள் மற்றும் விளக்குப்பொறிகளை பயன்படுத்தி, மகசூலை அதிகரித்து பயன்பெறலாம்' என, மோகனூர் உதவி இயக்குனர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

உயிரியல் நோய் கட்டுப்பாட்டு மருந்துகளான டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் காரணிகளை, அரிசி கஞ்சியுடன் கலந்து, விதை நேர்த்தி செய்து, 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி, விதைப்பதன் மூலமோ அல்லது இயற்கை உரங்களுடன் கலந்து, ஒரு வாரம் வைத்திருந்து, மண்ணில் இடுவதன்

மூலமோ, மண் மூலம் வேர்களுக்கு பரவும் நோய்களை கட்டுப்படுத்தி, வேர் வளர்ச்சி மற்றும் பயிர் வளர்ச்சியை துரிதப்படுத்தலாம்.

மேலும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லத்தை, தொழுஉரத்துடன் கலந்து இடுவதால், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, பயிருக்கு அளிக்கும். பயிருக்கு வளர்ச்சி ஊக்கிகளாகவும், நோய் மற்றும் வறட்சி எதிர்ப்பு தன்மையையும் அதிகரிக்கின்றன. பாஸ்போபேக்டீரியா உயிர் உரம் இடுவதன் மூலம், மண்ணில் நீரில் கரையாமல் உள்ள மணிச்சத்தை கரைத்து, பயிருக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறது.

ரைசோபியம் உயிர் உரத்தை, நிலக்கடலை பயிருக்கு இடுவதன் மூலம், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, வேர் முடிச்சிகளாக்கி, பயிரின் வளர்ச்சியையும், நிலக்கடலை பருப்பின் தரம் மற்றும் அளவையும் அதிகரிக்கிறது. மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றாக்குறையை போக்க, கரும்பு மற்றும் நெற்பயிர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட நுண்ணூட்ட கலவை உரங்களை பயன்படுத்தி, மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர்களில், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விளக்குப்பொறிகள், 33 சதவீதம் மானியத்துடன் உள்ளன. இவ்விளக்குப் பொறிகள், இரவு நேரங்களில், இளம் அந்துப்பூச்சிகளை கவர்ந்திழுத்து, மகசூல் சேதத்தை குறைக்கின்றன. உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள் மற்றும் விளக்குப்பொறிகள் அனைத்தும், மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் உள்ளது. விவசாயிகள் அவற்றை வாங்கி பயன்படுத்தி, மகசூலை அதிகரித்து பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பாமாயில் சாகுபடி குறித்து விழிப்புணர்வு பிரசாரம்**

விழுப்புரம்:பாமாயில் சாகுபடி குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை, வேளாண்மைத்துறை இணை இயக்குனர் துவக்கி வைத்தார். மத்திய, மாநில அரசுகளுடன் இணைந்து கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவனத்தின் சார்பில், பாமாயில் சாகுபடி பெருக்குத் திட்டம் குறித்து, மாவட்டம் முழுவதும் வேன் மூலம் விழிப்புணர்வு பிரசாரம் நடக்கிறது. விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துறை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி, வேன் பிரசாரத்தை துவக்கி வைத்தார். கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவனத்தின் விரிவாக்க மேலாளர் அசோகன் முன்னிலை வகித் தார். மேற்பார்வையாளர் ஏழுமலை வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குனர்கள் ரத்னசபாபதி(மத்திய திட்டம்), ராஜேந்திரன்(மாநில திட்டம்), உதவி வேளாண்மை இயக்குனர் சண்முகம் (தர கட்டுப்பாடு), உதவி வேளாண்மை இயக்குனர்கள் ஜானகிராமன், சரவணன், வனிதா, செல்வசேகர், ஆறுமுகம் மற்றும் சுப்ரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவன அலுவலர்கள் மேழிச்செல்வன், இளவழகன், மேற்பார்வையாளர்கள் ராஜாராமன், பாலு, சசிக்குமார், கார்த்திகேயன் செய்திருந்தனர்.

**பாசனத்திற்கு தடையின்றி மின்சப்ளை விவசாயிகள் கூட்டமைப்பு கோரிக்கை**

விழுப்புரம்:விவசாய பாசனத்திற்கு தடையின்றி மின்சப்ளை வழங்க வேண்டுமென மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பு சிறப்பு கூட்டம், விழுப்புரம் மார்க்கெட் கமிட்டி அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. மாவட்ட தலைவர் ராமராஜன் தலைமை

தாங்கினார். ரவி நயினார் வரவேற்றார். மாவட்ட பொதுச்செயலாளர் ரங்கராஜு முன்னிலை வகித்தார். கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய மழையின்மை, புயல் பாதிப்புகளால் பாதித்த விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கு முழுமையான மானியத் தொகை வழங்க வேண்டும். இயற்கை வழி விவசாய சாகுபடிக்கு அரசு உதவி வழங்க வேண்டும். கோமாரி நோய் தாக்குதலில் கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு அரசு நிவாரணத் தொகை வழங்கிட வேண்டும். கரும்பு ஒரு டன் விலை 3,500 ரூபாயாக உயர்த்திட வேண்டும். புதிய சர்க்கரை ஆலையை அமைத்திட வேண்டும். தடுப்பணை மற்றும் பாசன வாய்க்கால் பகுதியில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்றி புதுப்பிக்க வேண்டும். தோட்டப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மரக் கன்றுகள் மற்றும் இடு பொருட்களை 75 சதவீத மானியத்துடன் அரசு வழங்கிட வேண்டும். விவசாய பயன்பாட்டிற்கு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

**சொட்டு நீர் பாசனத்திற்கு மாறும் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள்**

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் சொட்டு நீர் பாசன முறையில் விவசாயம் செய்கின்றனர். தமிழக அரசு 5 ஏக்கருக்கும் குறைவாக உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச சொட்டு நீர் பாசன முறைகளை வழங்கி வருகிறது. பருவ மழை குறைவாக பெய்யும் நிலையில், கிணற்று பாசனத்தை நம்பி விவசாயம் செய்யும் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் 90 சதவீதம் பேர் சொட்டு நீர் பாசன முறைக்கு தங்களை மாற்றிக்கொண்டனர். ஏமப்பேர் அடுத்த ஜெஜெ நகர் பகுதியில் மரவள்ளி பயிர் செய்யும் விவசாய நிலங்களில் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறி வருகின்றனர்.

**மகசூலை அதிகரிக்க உயிரியல் பயிர் மருந்து உயிர் உரம் தேவை: வேளாண் உதவி இயக்குனர்**

மோகனூர்: "உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள் மற்றும் விளக்குப்பொறிகளை பயன்படுத்தி, மகசூலை அதிகரித்து பயன்பெறலாம்' என, மோகனூர் உதவி இயக்குனர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

உயிரியல் நோய் கட்டுப்பாட்டு மருந்துகளான டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் காரணிகளை, அரிசி கஞ்சியுடன் கலந்து, விதை நேர்த்தி செய்து, 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி, விதைப்பதன் மூலமோ அல்லது இயற்கை உரங்களுடன் கலந்து, ஒரு வாரம் வைத்திருந்து, மண்ணில் இடுவதன் மூலமோ, மண் மூலம் வேர்களுக்கு பரவும் நோய்களை கட்டுப்படுத்தி, வேர் வளர்ச்சி மற்றும் பயிர் வளர்ச்சியை துரிதப்படுத்தலாம். மேலும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லத்தை, தொழுஉரத்துடன் கலந்து இடுவதால், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, பயிருக்கு அளிக்கும். பயிருக்கு வளர்ச்சி ஊக்கிகளாகவும், நோய் மற்றும் வறட்சி எதிர்ப்பு தன்மையையும் அதிகரிக்கின்றன.

பாஸ்போபேக்டீரியா உயிர் உரம் இடுவதன் மூலம், மண்ணில் நீரில் கரையாமல் உள்ள மணிச்சத்தை கரைத்து, பயிருக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறது.

ரைசோபியம் உயிர் உரத்தை, நிலக்கடலை பயிருக்கு இடுவதன் மூலம், காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, வேர் முடிச்சிகளாக்கி, பயிரின் வளர்ச்சியையும், நிலக்கடலை பருப்பின் தரம் மற்றும் அளவையும் அதிகரிக்கிறது. மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றாக்குறையை போக்க, கரும்பு மற்றும் நெற்பயிர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட நுண்ணூட்ட கலவை உரங்களை பயன்படுத்தி, மகசூலை அதிகரிக்கலாம். பயிர்களில், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விளக்குப்பொறிகள், 33 சதவீதம் மானியத்துடன் உள்ளன.

இவ்விளக்குப் பொறிகள், இரவு நேரங்களில், இளம் அந்துப்பூச்சிகளை கவர்ந்திழுத்து, மகசூல் சேதத்தை குறைக்கின்றன. உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள் மற்றும் விளக்குப்பொறிகள் அனைத்தும், மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் உள்ளது. விவசாயிகள் அவற்றை வாங்கி பயன்படுத்தி, மகசூலை அதிகரித்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சள் வியாபாரத்தில் ஒரு கோடி மோசடி:எஸ்.பி.,யிடம் விவசாயிகள் புகார் மனு**

நாமக்கல்: மஞ்சளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதிக பணம் தருவதாக கூறி, விவசாயிகளிடம் இருந்து, ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான மஞ்சள் பெற்று, ஏமாற்றியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, விவசாயிகள், நேற்று, நாக்கல் எஸ்.பி.,யிடம் புகார் மனு அளித்தனர். சேலம் மாவட்டம், ஆத்தூர் அடுத்த மணிவிழுந்தான் காலனியைச் சேர்ந்த மஞ்சள் வியாபாரி பெரியண்ணன் உட்பட, 30க்கும் மேற்பட்ட விவசாயிகள், நேற்று, நாமக்கல் எஸ்.பி., கண்ணம்மாளிடம் கொடுத்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அடுத்த கவுண்டம்பாளையத்தில் உள்ள ஆர்.எஸ்., டிரேடர்ஸ் கம்பெனியின் உரிமையாளர்கள், கார்கூடல்பட்டி மூர்த்தி, கட்டனாச்சம்பட்டி கலைச்செல்வன், செல்வி ஆகிய மூவரும், 2012 ஜூலை, 1ம் தேதி, எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகளிடம் நேரில் வந்து பேசினர். அப்போது, "மஞ்சளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம், தேவையான மஞ்சள் உற்பத்தி செய்து கொடுத்தால், மற்ற டிரேடர்ஸ்களை காட்டிலும் கூடுதல் விலை தருகிறோம். ஏனைய பகுதியில் உள்ள விவசாயிகளிடம் இருந்து, மஞ்சள் வாங்கிக் கொடுத்தால், கூடுதலாக கமிஷன் தருகிறோம்' என, தெரிவித்தனர். அவர்களின் பேச்சை நம்பி, 2012 ஜூலை, 10ம் தேதி முதல், 240 டன் மஞ்சளை சப்ளை செய்தோம். அதற்கான, மொத்த தொகையான, ஒரு கோடியே, 63 லட்சத்து, 97, 555 ரூபாய்க்கு விற்பனை

செய்தோம். ஆனால், எட்டு தவணையாக, 64 லட்சத்து, 29,000 ரூபாய் மட்டுமே கொடுத்தனர். மீதமுள்ள, 99 லட்சத்து, 68, 555 ரூபாய் தரவில்லை. இதுதொடர்பாக, நேரில் பல முறை முறையிட்டோம். அதற்காக, எட்டு, "செக்'கில், 33 லட்சம் ரூபாய்க்கு எழுதி கொடுத்தனர். ஆனால், அந்த, "செக்'கில் பதிவு செய்யப்பட்ட பணம், அவரது ஆத்தூர் ஸ்டேட் பேங்க் கணக்கில் இல்லை. அதனால், "செக்' திரும்பி வந்தது. அதிர்ச்சியடைந்த நாங்கள், கடந்த, டிசம்பர், 14ம் தேதி, கார்கூடல்பட்டியில் உள்ள மூர்த்தியிடம் முறையிட்டோம். அவரும், மற்றும் சிலர் சேர்ந்து கொண்டு எங்களை மிரட்டினர். பணம் தரமுடியாது எனக் கூறி தகாத வார்த்தைகளால் திட்டினர். மேலும், எங்களுக்கு அமைச்சர் வரை, செல்வாக்கு உள்ளது. எங்களை ஒன்றும் செய்ய முடியாது என, தெரிவித்தனர். அதையடுத்து, மஞ்சளை கொடுத்து ஏமாந்த விவசாயிகளாகிய, மணிவிழுந்தான் காலனி அன்பழகன், அய்யாசாமி, வடிவேல், சிவக்குமார், வரதராஜ், சிறுவாச்சூர் முருகன், பழனிசாமி, நடராஜ், குப்புசாமி, ஒதியத்துறை நடேசன், சதாசிபுரம் தர்மலிங்கம், ராமானுஜபுரம் கோபால், நாவக்குறிச்சி பெருமாள் உள்ளிட்ட, 30 பேர் அடங்குவர். எனவே, சம்பந்தப்பட்ட ஆர்.எஸ்., டிரேடர்ஸ் நிர்வாகிகள் மூர்த்தி, செல்வி, கலைச்செல்வன் ஆகிய, மூவர் மீதும் கடும் நடவடிக்கை எடுத்து, மஞ்சள் பணத்தை பெற்றுத் தர வேண்டும். இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கல்**

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 109 விவசாயிகளுக்கு மானிய விலையில், 71 லட்சத்து, 90 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை, அமைச்சர் பழனியப்பன் வழங்கினார். அமைச்சர் பழனியப்பனர் பேசியது: வேளாண் உற்பத்தியை, இரண்டு மடங்காக பெருக்கி வருமானத்தை, மூன்று மடங்காக உயர்த்திடும் வகையிலும், விவசாய

உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கிலும், உற்பத்தி செலவினை குறைக்கும் வகையில் தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறையின் மூலம், மானிய விலையில் வேளாண் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இது வரை, 3,206 விவசாயிகளுக்கு, நான்கு கோடியே, 45 லட்சத்து, 85 ஆயிரம் மானியத்தில், வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் விவசாயிகளுக்கு, 399 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்க, ஒரு கோடியே, 91 லட்சத்து, 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில், 71 லட்சத்து, 90 ஆயிரம் ரூபாய் மதிப்பில், பலவகை தானிய கதிரடிக்கும் இயந்திரம், நான்கு சக்கர களை எடுக்கும் இயந்திரம், இரண்டு சக்கர களையெடுக்கும் இயந்திரம், தெளிப்பான்கள், பவர்டில்லர், உழுவை இயந்திர உபகரணங்கள் போன்ற நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், 109 விவசாயிகளுக்கு, 30 லட்சத்து, 39 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். டி.ஆர்.ஓ., ராமர், எம்.எல்.ஏ., அன்பழகன், மாவட்ட பஞ்சாயத்துக்குழு சேர்மன் அன்பழகன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகேசன், யூனியன் சேர்மன் நிர்மலா, நகராட்சி சேர்மன் சுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### டிச., 20ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும், 20ம் தேதி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் ராஜேஸ் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும், 20ம் தேதி வெள்ளிக்கிழமை, 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் ராஜேஸ் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு, குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகள் சங்க கிளை துவக்க விழா

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்கத்தின், புதிய கிளை திறப்பு விழா கிருஷ்ணகிரி அடுத்த, ஜெகதாப்பில் நடந்தது. மத்திய மாவட்ட துணை செயலாளர் ராஜா தலைமை வகித்தார். பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் சக்தவேல், யுவராஜ், அண்ணாமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளை சங்க தலைவர் கணேசன் வரவேற்றார். "தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, எண்ணெகொல்புதூரில் அருகே தடுப்பணை கட்டி, புதூர் வழியாக, தும்பலஹள்ளி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும். ஜெகதாப்பில் கால் நடை துணை மருந்தகம் அமைக்க வேண்டும். அன்டை மாநிலங்களை போல ஒரு லிட்டர் பாலுக்கு, ஆறு ரூபாய் உற்பத்தி மானியம் வழங்க வேண்டும், என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்கள் குறித்து சங்கத்தின் மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் பேசினார். கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் அசோக்குமார், பெருமா, வெங்கடேசன், வேலு, மணிமேகலை, கண்ணன்,பச்சையப்பன் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆலோசகர் நசீர் அகமது நன்றி கூறினார்.

## மக்காச்சோளத்தில் தொழில் நுட்பம் விவசாயிகளுக்கு நேரடியாக பயிற்சி

சென்னிமலை: மக்காச்சோள சாகுபடியில், விவசாயிகள் புதிய தொழில் நுட்பத்தை கடை பிடித்தால், மகசூல் அதிகரிக்கும், என, ஈரோடு உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் கார்த்திகேயன் தெரிவித்தார். சென்னிமலை யூனியன் வெப்பிலியில் நடந்த "அய்சோபாம்' மக்காச்சோளம் குறித்த, விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்று துணை இயக்குனர் பேசியதாவது:

மக்காச்சோளம், 100 முதல், 110 நாட்கள் வயதான, குறுகிய காலப்பயிராகும். இது நிலத்தில் இருந்து குறுகிய காலத்தில், விரைவாக சத்துகளை எடுத்துக் கொள்வதால், அடியுரமிடுவது மிகவும் அவசியமாகும். மேலும், மக்காச்சோளப்பயிர், அதிக வறட்சியும், அதிக நீரையும் தாங்காது. எனவே

தேவைக்கேற்ப நீர் பாய்ச்சுவது அவசியமாகும். ஒரு ஏக்கருக்கு, 25 ஆயிரம் செடிகள் இருந்தால் தான், 3 முதல், 4 டன் வரை மகசூல் பெற இயலும். நவீன தொழில் நுட்பத்தை தவறாது பின்பற்றினால், இந்த சாதனை மகசூல் சாத்தியமாகும், என்றார்.

சென்னிமலை வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வரவேற்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் பிரசாத், வெள்ளோடு துணை வேளாண்மை அலுவலர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

பல்வேறு பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். விதை நேர்த்தி செய்தல், விளக்குப்பொறி வைத்தல், மண் மாதிரி எடுத்தல் போன்ற செயல் விளக்கங்கள் செய்து காட்டப்பட்டன. விவசாயிகளுக்கு, உயிர் உரங்கள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை, உதவி வேளாண் அலுவலர்கள் கார்த்திகேயன், சிவக்குமார், சுதர்சன் ஆகியோர் செய்திருந்தனர். சென்னிமலை வேளாண் அலுவலர் ராஜாத்தி நன்றி கூறினார்.

**அரிசி ஆலை தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆத்துாரில் ரூ.35 கோடி வர்த்தகம் பாதிப்பு**



ஆத்தூர்: த்துாரில், அரிசி ஆலை தொழிலாளர்கள், கூலி உயர்வு கேட்டு, வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால், 35 கோடி ரூபாய்க்கு மேல், வர்த்தகம் பாதித்துள்ளது. சேலம் மாவட்டம், ஆத்தூர் பகுதியில், 38 அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன.இந்த ஆலைகளில், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, தொழிலாளர்க-

ளுக்கு கூலி உயர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு, 75 முதல் 100 சதவீதம் கூலி உயர்வு வழங்கும்படி, சேலம் மாவட்ட அரிசி ஆலை தொழிலாளர்கள் – ஏ.ஐ.டி.யு.சி., சங்கம் சார்பில், கோரிக்கை விடுக்-கப்பட்டது.அதற்கு, அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒப்புக் கொள்ளாததால், நவ., 1ம் தேதி முதல், தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வரு-கின்றனர்.நான்காம் கட்டமாக நடந்த பேச்சில், பெண் தொழிலாளர் களுக்கு, வேலைக்கான கூலி மற்றும் போனஸ் தொகை வழங்குவதில், உடன்பாடு ஏற்பட்-டது.ஆனால், நெல் வேக வைத்தல், மூட்டை துாக்குதல் உள்ளிட்ட பணிகளில் ஈடு-பட்டுள்ள தொழிலாளர்களின் கூலி உயர்வு குறித்து நடைபெற்ற ஐந்து கட்ட பேச்-சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. இந்த வேலை நிறுத்த போராட்-டத்தால், 35 கோடி ரூபாய்க்கு மேல், வர்த்தகம் பாதித்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சூறாவளி காற்றில் கரும்புகள் சேதம் மேலூரில் விவசாயிகள் வேதனை**

மேலூர், : மேலூரில் நேற்றுமுன்தினம் வீசிய சூறாவளி காற்றில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கரும்புகள் சாய்ந்து விழுந்தன. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டம், மேலூர் மற்றும் சுற்றி உள்ள நாவினிப்பட்டி, எட்டிமங்கலம், தனியாமங்கலம், சருகுவலையபட்டி உள்ளிட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் கரும்பு, வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் கரும்புகள் தமிழகம் மட்டுமின்றி, வட மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. நேற்றுமுன்தினம் இரவு மேலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் திடீரென லேசான மழையுடன், பலத்த சூறாவளி காற்று வீசியது. இதில் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த கரும்புகள் அனைத்தும் அடியோடு சாய்ந்து விழுந்தன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

சாலைக்கிபட்டியை சேர்ந்த விவசாயி லட்சுமணகுமார் கூறுகையில், ‘‘கரும்பு நட்டு பலன் கொடுக்க 9 மாதங்களாகும். ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்து கரும்பு பயிரிட்டோம். பொங்கல் பண்டி கையை முன்னிட்டு கரும்புகள் வெட்டுவதற்கு தயார் நிலையில் இருந்தன. திடீரென வீசிய சூறாவளி காற்றில் கரும்புகள் அனைத்தும் அடியோடு சாய்ந்து விட்டன. இதனால் கடன் வாங்கி

விவசாயம் செய்துள்ள எங்களுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்,'' என்றார்.

மதுரையை சேர்ந்த கரும்பு வியாபாரி செல்வக்குமர் கூறுகையில், ''மேலூர் பகுதி கரும்புகளுக்கு சுவை அதிகம். அதனால் விவசாயிகளிடம் முன்னதாகவே கரும்பை விலை பேசி அட்வான்ஸ் கொடுத்துள்ளோம். சூறாவளி காற்றில் கரும்புகள் சேதமடைந்ததால், எங்கள் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது,'' என்றனர்.

**மழை நிவாரணம் வழங்கல்**

தரங்கம்பாடி, : நாகை மாவட்டம் பொறையார் அருகே எருக்கட்டாஞ்சேரி வடக்கு மேட்டுத் தெருவை சேர்ந்தவர் சரோஜா. தொடர் மழையால் இவரது குடிசை வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது.

பூம்புகார் பவுன்ராஜ் எம்.எல்.ஏ. பாதிக்கப்பட்ட சரோஜா வீட்டுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். பின்னர் நிவாரண தொகை ரூ.2ஆயிரத்து 500ஐ வழங்கினார். தரங்கம்பாடி தாசில்தார் அழகர்சாமி, பேரூராட்சி தலைவர் கிருஷ்ணசாமி, வார்டு உறுப்பினர் விஜயகுமார், விஏஓ ராஜேந்திரன் உடன் இருந்தனர்.

**சம்பா பயிரில் பூச்சி மற்றும் நோய்கள் கட்டுப்படுத்த வேளாண் துறை யோசனை**

பேராவூரணி, : பேராவூ ரணி வட்டாரத்தில் நடப்பு சம்பா பயிரில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் இயற்கை வழிமுறைகள் குறித்து வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் மை உதவி இயக்குநர் ஈஸ்வர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பேராவூரணி வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 6,500 எக்டேரில் நடவு பணி முடிந்துள்ளது. பயிர்கள் வளர்ச்சி பருவம் முதல் தூர்கட்டும் பருவம் வரை பல நிலைகளில் உள்ளன.

இப்பருவத்தில் பெய்ய வேண்டிய வடகிழக்கு பருவமழை 30 சதவீதம் மட்டுமே பெய்துள்ளது. குறைவான மழையளவு மற்றும் பனிப்பொழிவு காரணமாக நெற்பயிரில் ஆங்காங்கே பூச்சி மற்றும் நோய் தாக்குதல் தென்படுகிறது. இது பொருளாதார சேத நிலைக்கு உட்பட்டு இருந் தாலும், வரும் முன் காப்பதே ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் நோக்கமாகும். இப்பருவத்தில் சாவித்திரி, ஆடுதுறை 39, பிபிடி 5204, ஆடுதுறை 44 ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பிபிடி 5204 ரகம் அதிக அளவு பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய ரகமாகும். எனவே விவசாயிகள் கீழ்க்கண்ட முறைகளை பின்பற்றி பூச்சி மற்றும் நோயினை கட்டுப்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பேராவூரணி வட்டாரத்தில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், தென்னையிலிருந்து கிடைக்கும் அடி மட்டைகளை வீணாக்காமல் சுமார் 5 அடி உயரத்திற்கு வெட்டி வயலில் 10ல் இருந்து 15அடி இடைவெளியில் ஆங்காங்கே ஊன்றி வைத்தால் அவைகளில் பறவைகள் உட்கார்ந்து நெற்பயிரில் காணப்படும் அனைத்து பூச்சிகளையும் பிடித்து உண்ணும். இரவில் ஆந்தை, கோட்டான் ஆகியவை இம்மட்டைகளில் உட்கார்ந்து எலிகளை பிடித்து உண்ணும். புகையான் தாக்குதல் தென்பட்டால் நீரை வடிப்பது அவசியம். தழைச்சத்து குறைத்து இடுவதுடன் பிரித்து இட வேண்டும். வயல் வரப்புகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மண் பரிசோ தனை செய்து அதன்படி உரமிட வேண்டும். குருத்துப்பூச்சி முட்டைகளை சேகரித்து அழிக்கலாம். இதனை கட்டுப்படுத்த டிரைகோகிரம்மா, ஜப்பானிக்கம் என்னும் முட்டை ஒட்டுண்ணி அட்டையை நடவு செய்த 25, 40, 55ம் நாட்களில் வயலில் ஆங்காங்கே கட்டலாம்.

பாக்டீரியல் இலைக்கருகல் நோய் வரும் முன் காக்க சூடோமோனாஸ் ஏக்கருக்கு ஒரு கிலோ, 200 லிட்டர் நீரில் கலந்து இரண்டு அல்லது மூன்று முறை தெளிக்கலாம். பூச்சிகளின் பொருளாதார சேதநிலை அறிந்து பூச்சிமருந்து தெளிக்கலாம். இதனால் இயற்கையாக உருவாகும் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்து பயிரை பாதுகாக்க உதவும். வேப்பங்கொட்டை 5 சதம் கரைசல் அல்லது 3 சத வேப்ப எண்ணெய் தெளித்தும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். மேற்கண்ட எளிய வழிமுறைகளை கடைப்பிடித்து பூச்சி நோய்களை கட்டுப்படுத்தி குறைந்த செலவில் நிறைந்த வருமானம் பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இறவை நிலக்கடலை சாகுபடி கூடுதல் மகசூலுக்கு 10 வழிமுறைகள்வேளாண் அதிகாரி விளக்கம்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் மார்கழிப் பட்ட இறவை நிலக்கடலை சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். இதில் கூடுதல் மகசூல் பெறுவதற் கான பத்து வழிமுறைகளை புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ கான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள் செய்திக்குறிப்பு: கூடுதல் மகசூலுக்கு ஏக்கருக்கு 50, 55 கிலோ விதைப்பருப்புகள் பயன்படுத்தி விதைப்பு செய்ய வேண்டும். விதைகள் தரமானதாக, சான்று பெற்ற பூச்சி நோய்த் தாக்காத, திரட்சியான நல்ல முளைப்புத் திறன் உள்ள விதைகளை மட்டும் பயன்படுத்த வேண் டும். ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைக்கோடர்மா விரிடி அல்லது 10கிராம் சூடோ மோனாஸ் ப்ளாரசன்ஸ் என்ற எதிர் உயிர் பூஞ்சான மருந்தினைக்

கலந்து உடன் விதைக்க வேண்டும், அல்லது 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது கார்பாக்சின் ரசாயனப் பூஞ்சான மருந்து கொண்டு விதை நேர்த்தி செய்து 24 மணிநேரம் வைத்திருந்து விதைப்பு செய்யவும். இதனால் விதை மூலம் பரவும் நோய்களான வேர் அழுகல் நோய் போன்றவை கட்டுப்படுத்தப்படும்.

இறவை நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 15 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட், 35 கிலோ பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இடவேண்டும், ரைசோ பியம் (நிலக்கடலை) மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை ஏக்கருக்கு தலா நான்கு பாக்கெட் (800 கிராம்) வீதம் 10 கிலோ தொழு உரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து வயலில் இடவும், விதைய ளவு ஏக்கருக்கு 55 கிலோ விதை கடலைப் பருப்புகளை பயன்படுத்தி வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும்.

ஒரு ச.மீக்கு 33 செடிகள் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண்ணூட்டக் கலவை யினை 20 கிலோ மணலு டன் கலந்து விதைப்பு முடிந்தவுடன் மேலாக சீராக தூவவும். இதனை அடியுரமாக இடக்கூடாது. நுண்சத்து இடுவதால் காய்கள் திரட்சியாகவும், பொக்கற்றதாகவும் எண் ணெய் சத்து மிகுந்ததாகவும் இருக்கும்.

இறவை நிலக்கடலை யில் கூடுதல் மகசூல் பெற களை நிர்வாகம் அவசியம். பிக்குளோரலின் என்ற களைக்கொல்லியினை ஏக்கருக்கு 800 மி.லி. என்ற அளவில் விதைத்த மூன்று நாட்களுக் குள் கைத்தெளிப் பான் கொண்டு தெளித்து அல்லது மணலுடன் கலந்து நிலத்தில் ஈரம் இருக்கும்போது தெளிக்கலாம். பின்பு

45வது நாளில் ஒரு கைக்களை எடுப்பது அவசியமாகும். ஜிப்சத்திலுள்ள சுண்ணாம்புச் சத்துக்கள் மற்றும் கந்தகச் சத்துக்கள் எண்ணெய்வித்து பயிர்களுக்கு அவசியம். ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தினை அடியுரமாகவும், 80 கிலோ ஜிப்சத்தினை 45வது நாளில் மண் ஈரத்திற்கேற்ப இரண்டாவது களை எடுக்கும் சமயம் இட்டு நன்கு மண் அணைக்க வேணடும், இதனால் விழுதுகள் நன்கு இறங்கி திரட்சியான, அதிக எண்ணெய்ச் சத்துள்ள நிலக்கடலை கிடைக்கும். இறவை நிலக்கடலையில் பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும் காய்பிடிக்கும் விகிதத்தை அதிகப்படுத்தவும், பொக்கற்ற காய்கள் கிடைக்கவும் விதைத்து 25 மற்றும் 35வது நாட்களில் ஊட்டச்சத்துக் கரைசலைத் தெளிக்க வேண்டும். ஊட்டச்சத்துக் கரைசலை தயாரிக்க 1 கிலோ டிஏபி, 400 கிராம் அம்மோனியம் சல்பேட், 200 கிராம் போராக்ஸ் ஆகியவற்றை முதல் நாள் இரவு 15 லி. தண்ணீரில் ஊறவைக்கவும், மறுநாள் காலையில் கரை சலை வடிகட்டி அத்துடன் 187 லி. தண்ணீரினை சேர்த்து 200 லி. கரைசலாக்கி இத்துடன் 140 மிலி பிளானோபிக்ஸ் என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தினையும் சேர்த்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். இறவை நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் மேற்கண்ட பத்து வழிமுறைகளைப் பின்பற்றி சத்தான காய்களைக் கொத்தாக பெற்று அதிக மகசூலும் கூடுதல் வருமான மும் பெறலாம் என புதுக் கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ கான் தெரிவித்துள்ளார்.ஊடு பயிர்  ஓரப் பயிர்

இதில் ஊடுபயிராக உளுந்து, தட்டைபயறு, சூரியகாந்தி போன்ற பயிர்களை சாகுபடி செய்யவேண்டும். ஓரப் பயிராக ஆமணக்கு அல்லது மக்காச்சோளத்தினை இரண்டு வரிசை நடவு செய்ய வேண்டும். இதனால் பூச்சி, நோய்கள் கட்டுப்படுத்துவதோடு கூடுதல் வருமானமும் கிடைக்கும்.

**ஜனவரி மாதம் முதல் கோழி வளர்ப்புக்கு கிலோவிற்கு ரூ4.20 உயர்த்தி வழங்க வேண்டும் கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் கோரிக்கை**

கிருஷ்ணகிரி, : ஜனவரி மாதம் முதல் கோழி வளர்ப்புக்கு கிலோவிற்கு ரூ4.20 உயர்த்தி வழங்க வேண்டுமென கிருஷ்ணகிரியில் நடந்கித கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் முதல் மாவட்ட மாநாடு நடந்தது. மாவட்ட தலைவர் முனிசாமி தலைமை வகித்தார். செயலாளர் அன்பழகன் அறிக்கை வாசித்து வரவேற்றார். பொருளாளர் கதிரேசன் வரவு -செலவு அறிக்கை வாசித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் இருதயராஜ் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.

மாநில தலைவரும், முன்னாள் எம்எல்ஏவுமான லதா பேசினார். மாநில துணை செயலாளர் மணி, மாவட்ட பொறுப்பாளர்கள் தர்மபுரி வேலு, காஞ்சிபுரம் பாண்டியன், கிருஷ்ணகிரி மணி, நிர்வாகிகள் மணிகண்டன், ரமேஷ், நாகராஜ், சுரேஷ், அசோகன், சிவக்குமார், கெலமங்கலம் கோவிந்தன், சண்முகபாபு, திம்மராயன், நாகராஜ், பர்கூர் ஜெயபால் உள்ளிட்ட கறிக்கோழி வளர்ப்பு சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட துணை செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார். இம்மாநாட்டில், ஜனவரி மாதம் முதல் கோழி வளர்ப்பு நிறுவனங்கள், கோழி வளர்ப்பு கிலோவிற்கு குறைந்தபட்சம் ரூ4.20 உயர்த்தி வழங்க வேண்டும். ஒவ்வொரு கோழி வளர்ப்பு நிறுவனமும் அவரவர்களின் எப்சிஆர் (தீவன கணக்கீடு முறை) கணக்கை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். பில் தொகைகளை செக் மூலம் தர வேண்டும். ஒரே மாதிரியான கூலி தர வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகளுக்கு ரூ.135 கோடி கடன்**

கோபால்பட்டி, : தமிழகத்தில் கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளுக்கு ரூ.135 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விசுவநாதன் தெரிவித்தார். சாணார்பட்டி அருகே கோபால்பட்டியில் ரூ.13 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி சங்க கட்டிடம் திறப்பு விழா நேற்று நடந்தது.

விழாவிற்கு கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். கட்டிடத்தை திறந்து வைத்து மின்சாரத்துறை அமைச்சர் நத்தம் விசுவநாதன் பேசியதாவது:
தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பாண்டில் விவசாயிகளுக்கு கடன் வழங்க ரூ.195 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் தற்போது ரூ.135 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இவற்றை விவசாயிகள் முறையாக பயன்படுத்தி கொள்ள வேண் டும். விவசாயிகளுக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.
நத்தம் தொகுதி செயலா ளர் கண்ணன், கூட்டுறவு வங்கி தலைவர் பிகேடி நடராஜன், சாணார்பட்டி ஒன்றிய அதிமுக செயலாளர் ராமராஜ், நத்தம் ஒன்றிய செய லாளர் ஷாஜகான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இலை கருகல் நோயை கட்டுப்படுத்தும் சூடோமோனாஸ் மருந்து 50 சத மானியத்தில் விற்பனை**

நீடாமங்கலம், : நெற்பயிரில் இலை கருகல் நோயை கட்டுப்படுத்தும் சூடோமோனாஸ் மருந்து 50 சதவீத மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது. நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்கனர் இளஞ்செழியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
நெற்பயிரில் பாக்டீரியல் இலை கருகல் நோய் அதிகமாக யூரியா இடப்பட்ட வயல்களிலும், பொட்டாஷ் போடப்பட்ட வயல்களிலும் தோன்றும். மழையுடன் கூடிய காற்று வீசும் போது தாக்கப்பட்ட இலைகளின் மேற்பரப்பில் காணப்படும் பாக்டீரியா நோய் மழை நீரில் கரைந்து இலைகள் ஒன்றோடு ஒன்று உரசும் போது நோய் பரவுகிறது.மேலும் பாசன நீருடன் கலந்து நோயை பரப்புகிறது.

இலைகளின் நுனியிலிருந்து மஞ்சள் நிற கோடுகள் கீழ்புறம் நோக்கி நடு நரம்பின் இருபுறமும் தோன்றுகிறது. பின்னர் இலை முழுவதும் பரவி இலை மஞ்சள் நிறமாக பரவி காய்ந்து சருகாக காணப்படும். எனவே மழை நின்றவுடன் இந்நோயை கட்டுப்படுத்துவது அவசியம். இதற்கு சூடோமோனாஸ் புளோரசன்ஸ் எனும் எதிர் உயிர் பாக்டீயாவை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5மிலி வீதம் கலந்து ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு

தெளித்து கட்டுப்படுத்தலாம்.  சூடோமோனாஸ் மருந்து ஒரு லிட்டர் ரூ.320. இதனை 50 சத மானியத்தில் ரூ. 160 க்கு அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளது. தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் பரிந்துரை வாங்கி பெற்றுக் கொள்ளலாம். சூடோமோனாஸ் மருந்துடன் சாணக்கரைசலை  கலந்து தெளிப்பதன் மூலம் அதிக பயன் கிடைக்கும். மேலும் விபரங்களுக்கு 04367-260582 என்ற தொலை பேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என இளஞ்செழியன் தெரிவித்தார்.

**மாவட்டம் முழுவதும் புளி காய்ப்பு சீசன் துவங்கியது கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்பு**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் புளி காய்ப்பு சீசன் துவங்கியது. நடப்பாண்டில் பருவமழை அதிகரிப்பால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் தொப்பூர், பென்னாகரம், ஒகேனக்கல், மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு, தர்மபுரி போன்ற பகுதிகளில் உள்ள காடுகளில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் வனத்துறை மூலம் புளியமரங்கள் வளர்க்கப்படுகின்றன. அந்த மரங்களில் தற்போது நன்கு காய் பிடித்துள்ளது. இதுபோல் தர்மபுரி-சேலம் நெடுஞ்சாலை, பென்னாகரம் சாலை, பாப்பாரப்பட்டி சாலை, திருப்பத்தூர் சாலை, பாலக்கோடு சாலை, அரூர் சாலை மற்றும் மாவட்டத்தில் கிராமப்புற சாலை ஓரங்களில் புளிய மரங்களில் புளியங்காய் காய்க்கத் தொடங்கியுள்ளது. இதனால் நடப்பாண்டு சீசனில் புளி கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இதுகுறித்து புளி வியாபாரிகள் கூறுகையில், வனப்பகுதி, தோட்டம் மற்றும் சாலையோரங்களில் அதிகளவில் புளியமரம் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த புளியமரங்களில் தற்போது காய்ப்பு சீசன் தொடங்கி உள்ளது. நடப்பாண்டில் புளியில் கூடுதல் மகசூல் கிடைக்கும். கடந்த முறை எதிர்பார்த்த அளவிற்கு மகசூல் கிடைக்க வில்லை. இந்த முறை ஏலம் எடுப்பவர்கள் நஷ்டம் இல்லாமல் லாபத்தை பார்க்கலாம். இந்த தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற காத்திருக்கின்றன என்றனர்.

**அதிக லாபம் தரும் கொட்டகை முறை ஆடு வளர்ப்பு**

சேலம், : ஆடுகளை கொட்டில் முறையில் அடை த்து வளர்த்தால், அதிக லாபத்தை பெறலாம் என்று கூறுகிறார், நவலடி ஆட்டுப்பண்ணை நடத்தி வரும் செல்வராஜ். சிவில் இன்ஜினியரிங் முடித்து விட்டு விவசாயத்தை விரும்பி செய்து வரும் அவர் மேலும் கூறியதாவது:

அதிக லாபம் தருவதால் வெள்ளாடு வளர்ப்பை, படித்த இளைஞர்கள் அதிக அளவில் செய்து வருகின்றனர். பராமரிப்பு மிகவும் குறைவு என்பதால், ஏராளமா னோர் ஆடுகளை வளர்க்க விரும்புகிறார்கள். பண்ணை கள் அமைத்து ஆடு வளர்ப்பவர்கள் குறைவாக இருக்கின்றனர். எங்கள் பண்ணை யில் கொட்டகை முறையில் ஆடுகளை வளர்க்கிறோம். வெள்ளாடு வளர்க்க குறைந்த முதலீடே தேவைப்படுகிறது.

சிறிய அளவில் 25 ஆடு கள் கொண்ட ஆட்டு பண் ணை (பரண்மேல் குடில்) அமைக்க குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாய் போதுமானது. நாட்டு வெள்ளாடு களை விட தலைச்சேரி ஆடுகள் விரைவாக வளரும். எடையும் அதிகரிக்கும். எனவே இந்த கொட்டகை முறையில் 25 தலைச்சேரி ஆடுகளை வளர்க்கலாம். இதற்கு ஒரு போயர் கிடாய் போதும். 25 ஆடுகளுக்கு தீவனம் வளர்க்க, ஒரு ஏக்கர் நிலம் போதும். போயர் கிடாயை இனக்கலப்பு செய்து பெறப்படும் இனம் தரமானதாக உள்ளது.

தலைச்சேரி பெட்டை ஆடுகள் 30 முதல் 40 கிலோ வரையிலும், கிடாக்கள் 40 முதல் 50 கிலோ வரையும் எடை இருக்கும். நாள் ஒன்றுக்கு ஒரு லிட்டர் முதல் 2 லிட்டர் வரை பால் கறக்கும் திறன் இந்த ஆடுகளுக்கு உண்டு. முதல் முறை குட்டி போடும் போது மட்டும் ஒரு குட்டி போடும். அதன் பின்னர் ஒரு ஈற்றுக்கு 2 முதல் 3 குட்டிகள் வரை ஈனும்.

தென்னாப்பிரிக்கா நாட்டை சேர்ந்த போயர் ஆடுகள், இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. இந்த ஆட்டின் குட்டிகள் பிறந்த உடன் மூன்றரை கிலோ எடை இருக்கும். பெட்டை ஆடுகள் 60 முதல் 70 கிலோவும், கிடா 100 கிலோ

எடையும் இருக்கும். தலைச்சேரி பெட்டை ஆட்டு டன், போயர் கிடாயை சேர் க்கும் போது அதிக எடை உள்ள குட்டியை ஈனுகிறது.

இந்த குட்டி ஒரு மாதம் 6 கிலோ வரை எடை அதிகரிக்கும். மேலும் இதற்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். இந்த கலப்பின பெட்டை ஆடுகள் இன விருத்தியாகவும், கலப்பின கிடாய் இறைச்சிக்காகவும் பயன்படுகிறது. இதனுடைய கறி மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கும். சாதாரண ஆட்டை விட போயர் ஆடு விரைவில் வளர்வதால் தீவன செலவு மிச்சமாகும்.

ரூ4 லட்சம் லாபம்:

ஆடுகளை புதியதாக வளர்ப்பவர்களுக்கு முதல் ஆண்டு லாபம் இல்லை. 2வது ஆண்டில் ஒரு ஆடு 6 குட்டிகள் வரை போடும். எனவே 25 ஆடுகள் மூலமாக 150 குட்டிகள் கிடைக்கும். இதை 3 மாதம் வளர்த்து விற்கும் போது ஒருகுட்டி ரூ3 ஆயிரத்து 500க்கு விற்கலாம். 25 ஆடுகள் மூலமாக ஆண்டுக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

25 ஆடுகளை வளர்க்க வேலையாள் கூலி, பசுந்தீவனம் மற்றும் பராமரிப்பு செலவு என ரூ1 லட்சம் ஆகும். எனவே ஆண்டுக்கு ரூ4 லட்சம் லாபம் கிடைக்கும்.

இவ்வாறு செல்வராஜ் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்**

கிருஷ்ணகிரி,

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் விலை நிர்ண யம் செய்ய வேண்டும் என்று கிருஷ்ணகிரியில் நடந்த தமிழக விவசாயிகள் சங்க கிளை தொடக்க விழாவில் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

**கிளை சங்கம் தொடக்கம்**

தமிழக விவசாயிகள் சங்கத்தின் கிளை சங்க தொடக்க விழா மற்றும் கொடியேற்று விழா கிருஷ்ணகிரி மாவட்டம் ஜெகதாப்பில் நடந்தது. சங்கத்தின் மத்திய மாவட்ட துணைச் செயலாளர் ராஜா தலைமை தாங்கினார். கிளை சங்க தலைவர் கணேசன் வரவேற்றார். கிளை சங்க நிர்வாகி ராஜமாணிக்கம், பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் சக்திவேல் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தார்கள். மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர் சங்க கொடி யேற்றினார். பின்னர் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:- தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே எண்ணெக்கொல் புதூர் அருகே தடுப்பணை கட்டி, தண்ணீரை புதூர் வழியாக பூலாப்பட்டி அணைக்கு கொண்டு செல்லும் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும். பாலனூர், ஜெகதாப் பகுதியில் அடிக்கடி பழுதாகும் டிரான்ஸ்பார்மர் களை சீரமைத்து, தடையின்றி மின்சாரம் வழங்க வேண் டும்.

**இழப்பீடு**

கறவை மாடு இறந்தால் ஒரு மாட்டிற்கு ரூ.25 ஆயிரமும், கிடாரி இறந்தால் ரூ.15 ஆயிரமும் கன்றுக்கு ரூ.10 ஆயிரமும், பஞ்சாயத்து அளவில் குழுக்கள் அமைத்து

அதன் பரிந்துரையின் பேரில் இழப்பீடு வழங்க வேண்டும். பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.6 உற்பத்தி மானியமாகவும், ரூ.10 விலை உயர்த்தியும் கொடுக்க வேண்டும். சொட்டுநீர், தெளிப்புநீர், பைப் லைன் போன்றவை பெரிய, சிறிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் அரசு செலவில் செய்து கொடுக்க வேண்டும். கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 75 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண் டும். யானைகளால் ஏற்படும் இழப்பிற்கு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரமும், உயிர் சேதத்திற்கு ரூ.10 லட்சமும் இழப்பீடு வழங்க வேண்டும்.

## கரும்பு விலை

நடப்பு ஆண்டில் கரும்பு உற்பத்தி குறைவுக்கு காரணம் வறட்சி மட்டும் அல்ல. விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால் அவர்கள் மாற்று பயிருக்கு சென்றது காரணமாகும். எனவே அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்படி கரும்பு டன் ஒன்றுக்கு 8.0 சதவீத சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு ரூ.5 ஆயிரம் விலை கொடுக்க வேண்டும். மேலும் வெட்டுக்கூலி, லாரி வாடகை போன்றவற்றை சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலையே ஏற்றுக் கொள்ள வேண்டும். காய்ந்து போன கரும்பு பயிர்களுக்கு ஏக்கருக்கு உற்பத்தி செலவாக ரூ.50 ஆயிரம் அரசு வழங்க வேண்டும். ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் மின்சாரம் மற்றும் எத்தனால் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் அசோக்குமார், பெருமா, வெங்கடேசன் உள்பட பலர் கலந்து கொண்டார்கள். முடிவில் ஆலோசகர் நசீர் அகமது நன்றி கூறினார்.

**மீனவர்களுக்கு 10 நாட்களில் டீசல் மானியம் திருமுருகன் எம்.எல்.ஏ. பேட்டி**

காரைக்கால்,

மீனவர்களுக்கு 10 நாட்களில் டீசல் மானியம் கிடைக்க முதல்-அமைச்சர் உறுதி அளித்துள்ளார் என்று திருமுருகன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

இதுகுறித்து காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.என். திருமுருகன் நிருபர்களிடம் கூறியதாவது:-

முதல்-அமைச்சரிடம் கோரிக்கை

புதுச்சேரி முதல்-அமைச்சர் ரங்கசாமியை, காரைக்கால் மாவட்ட மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் மற்றும் மீனவ பிரதிநிதிகளுடன் நேரில் சென்று சந்தித்தேன். அப்பொழுது காரைக்கால் மாவட்டம், கிளிஞ்சல்மேட்டை சேர்ந்த செல்வகுமார் என்பவருக்கு சொந்தமான மீன்பிடி விசைப்படகு, கடந்த நவம்பர் 27-ந் தேதி மாலை 6 மணியளவில் மீன்பிடி துறைமுகத்திற்கு திரும்பும்போது அரசலாறு முகத் துவாரப் பகுதியில் நீண்ட நாட்களாக தூர்வாராத காரணத்தினால் ஏற்பட்ட மணல்திட்டில் சிக்கி பாறை யில் மோதியது. மீட்க முடியாத சூழ்நிலையில், அந்த படகு தலைகுப்புறக் கவிழ்ந்து முழுவதும் சேதம டைந்தது. இதுபோன்று அடிக்கடி ஏராளமான படகுகள் தரைதட்டி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு வருவதால், காரைக்கால் அரசலாறு முகத்துவார பகுதியை தூர்வார ஏற்பாடு செய்ய வேண்டும் என்று முதல் அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

டீசல் மானியம்

மேலும், முகத்துவார பகுதியை தூர்வாராமல் அரசு அலட்சியமாக இருந்த காரணத்தினால்தான் அந்த படகு சேதமடைந்துள்ளது. எனவே படகு உரிமையாளருக்கு முழு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட முதல்- அமைச்சர் ரங்கசாமி, முகத்து வார பகுதியை உடனடியாக தூர்வார நடவடிக்கை எடுப்பதாகவும், படகு உரிமையாளருக்கு நிவா ரணம் வழங்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை

அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். அதுபோன்று விடுபட்ட டீசல் மானியத்தை உடனடியாக வழங்க வேண் டும் என்று கேட்டுக் கொண்டதற்கு 10 நாட்களில் பயனாளிகளுக்கு டீசல் மானியம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் முதல்- அமைச்சர் தெரிவித்துள்ளார். நியமனம் மேலும், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட் டுள்ள தமிழக மீனவர்களின் குடும்பத்திற்கு தமிழக அரசு உதவித்தொகை வழங்குவது போன்று இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள காரைக்கால் மீனவர்களின் குடும்பத்திற்கும் உதவித்தொகை வழங்க வேண்டும் என்று முதல்- அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட முதல்-அமைச்சர், தமிழக அரசு எப்படி உதவித்தொகை வழங்குகிறது? என்பது குறித்து தமிழக அரசுடன் தொடர்பு கொண்டு பேசி உரிய ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார். அதுபோன்று காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் உள்ள அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர் கருவி கடந்த 2 வாரமாக பழுதடைந்துள்ளது. பிரசவத்திற்கு முன்பு தாயின் வயிற்றில் உள்ள குழந்தை எப்படி உள்ளது? என்பது குறித்து அந்த கருவியைக் கொண்டு பரிசோ தனை செய்த பிறகுதான் பிரசவம் பார்ப்பார்கள். எனவே அந்த கருவியை உடனடியாக பழுது நீக்க ஏற்பாடு செய்ய வேண்டும். டயாலிசிஸ் மெஷின் காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் நிறுவப் பட்டு சுமார் 6 மாதங்கள்தான் செயல்பட்டது. அந்த கருவியை இயக்குவதற்கான டெக்னீஷியன்கள் இல்லாததால் அந்த மெஷினும் இயங்காமல் உள்ளது. எனவே உரிய டெக்னீஷியன்களை நியமனம் செய்து தொடர்ந்து 24 மணி நேரமும் இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு 2 வாரங்களில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர் கருவியை பழுது நீக்க ஏற்பாடு செய்வதாகவும், டயாலிசிஸ் மெஷினை இயக்குவதற்கான டெக்னீஷியன்களை விரைவில் நியமனம் செய்வதாகவும் முதல்-அமைச்சர் ரங்கசாமி உறுதி அளித்துள்ளார்.

**தேயிலை நுகர்வை அதிகரிக்க கிராமப்புறங்களை இலக்காக கொண்டு செயல்பட திட்டம்**



கொல்கத்தா

தேயிலை நுகர்வை அதிகரிக்கும் வகையில் கிராமப்புறங்களை இலக்காக கொண்டு செயல்பட தேயிலை வாரியம் திட்டமிட்டுள்ளது. இதற்காக முன்னணி நிறு வனங்களுடன் இணைந்து பணியாற்ற இவ்வாரியம் உத்தேசித்துள்ளது.

இது குறித்து தேயிலை வாரியத்தின் தலைவர் எம்.ஜி.வி.கே.பானு கூறும்போது, ''தேயிலை பயன்பாட்டை அதிகரிப்பது தொடர்பாக வழிநடத்தும் குழுவின் செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஒரு மாதத்தில் இத்திட்டம் அறிமுகம் செய்யப்படும்'' என்று தெரிவித்தார். தேயிலை உற்பத்தி அமோகமாக இருக்கிறது. இதனால் விலை வீழ்ச்சிக்கான வாய்ப்புகள் உருவாகும். அத்துடன் தேயிலை ஏற்றுமதி நிலவரமும் திருப்திகரமாக இல்லை. இது போன்ற காரணங்களால் உள்நாட்டில் தேயிலை பயன்பாட்டை அதிகரிக்க தேயிலை வாரியம் விரும்புகிறது.

நடப்பு நிதி ஆண்டில் (2013–14) 119 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டை விட 4.8 சதவீதம் அதிகமாகும். நடப்பு ஆண்டில் ஈரானுக்கு மட்டும் 2.10 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதியாகும் என எதிர்பார்ப்பதாக இந்திய தேயிலை சங்கத்தின் தலைவர் ஏ.என்.சிங் கூறினார்.

## ரூ.8 கோடி செலவில் புதுப்பொலிவு பெறும் தாவரவியல் பூங்கா



சிறந்த சுற்றுலா தலங்களில் ஒன்றாக புதுச்சேரி திகழ்ந்து வருகிறது. புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களால் உருவாக்கப்பட்ட அழகிய கடற்கரையை கொண்ட நகரம். இங்கு வெளிநாடுகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் வரும் சுற்றுலா பயணிகள் கோடை காலங்களில் பகல் நேரங்களில் பூங்காக்களுக்கு சென்று அதன் அழகை ரசித்து பொழுது போக்குவது வழக்கம்.

### தாவரவியல் பூங்கா

புதுச்சேரி நகரின் மையப்பகுதியில் சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில் பிரெஞ்சு ஆட்சி காலத்தில் 1826–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது தாவரவியல் பூங்கா. இந்த பூங்கா பல வகையான மரங்கள், செடிகள் மற்றும் அழகாக வடிவமைக்கப்பட்ட தோட்டங்கள், செயற்கை நீரூற்று, குழந்தைகள் ரெயில் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இது தாவரவியல் பூங்காவாகவும், பொதுப்பூங்காவாகவும் சிறந்து விளங்கியது. தலை சிறந்த பொழுதுபோக்கு மையமாகவும் திகழ்கிறது. இந்த தாவரவியல் பூங்கா வேளாண்துறை இயக்குனரகத்தின் கீழ் உள்ள தோட்டக்கலை மூலமாக மேம்படுத்தப்பட்டு வந்தது.

## 70 சதவீதம் சேதம்

இந்த நிலையில் கடந்த 2011–ம் ஆண்டு டிசம்பர் 30–ந் தேதி புதுச்சேரியை கடந்து சென்ற தானே புயலின் ருத்ரதாண்டவத்திற்கு தாவரவியல் பூங்காவும் தப்பவில்லை. தாவரவியல் பூங்காவில் இருந்த பாக்கு மரங்கள், பெரிய பெரிய வெளிநாட்டு மரங்கள், நுழைவாயிலில் நின்ற பெரிய ஆலமரம் உள்பட 500–க்கும் மேற்பட்ட மரங்கள் முழுவதுமாக சாய்ந்து விழுந்தன. சுமார் 70 சதவீதம் மரங்களில் மேற்கிளைகள் ஒடிந்து விழுந்தன.

இதனால் யாரும் உள்ளே செல்ல முடியாத அளவிற்கு மரங்கள் குறுக்கும், நெடுக்குமாக விழுந்து கிடந்தது. தாவரவியல் பூங்கா பசுமையாக இருந்த போது ஆகாயத்தில் இருந்து பார்த்தால் தரையே தெரியாது. ஆனால் புயலின் கோரதாண்டவத்திற்கு பிறகு ஆகாயத்தில் இருந்து பார்த்தால் தரை நன்றாக தெரிந்தது.

## குழந்தைகள் ரெயில்

இதனை தொடர்ந்து இந்த தாவரவியல் பூங்காவை மேம்படுத்த துறையின் விஞ்ஞானிகளும் தாவரவியல் நிபுணர்களும் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டு வந்தனர். இதன் பயனாக தானே புயலால் சேதம் அடைந்த மரங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டன. மேலும் ஏராளமான மரம், செடிகள் புதிதாக வைக்கப்பட்டுள்ளது. பின்னர் பொதுமக்களின் பார்வைக்காக திறந்து விடப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தாவரவியல் பூங்காவில் உள்ள குழந்தைகள் ரெயில் சரி செய்யப்பட்டது. அதன் பின்னர் இங்கு வரும் குழந்தைகள் இந்த ரெயில் ஏறி சந்தோஷமாக பொழுதை போக்கி மகிழ்கின்றனர். அதேபோல் சில நாட்களுக்கு முன்பு இங்குள்ள இசை நடன நீரூற்று சரி செய்யப்பட்டது. இது தற்போது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் இரவு

7.30 மணி வரை நடத்தப்பட்டு வருகிறது. இதனை வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் புதுச்சேரி வரும் சுற்றுலா பயணிகள் பார்த்து ரசிக்கின்றனர். **ரூ.8 கோடி** இந்த நிலையில் தாவரவியல் பூங்காவை புதுப்பிக்க முதல்–அமைச்சர் ரங்கசாமி, சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜவேலு, சுற்றுலா வளர்ச்சி கழக தலைவர் வையாபுரி மணிகண்டன் ஆகியோர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதற்காக மத்திய அரசிடம் இருந்து ரூ.8 கோடியே 15 லட்சம் நிதி உதவி பெறப்பட்டது. இந்த நிதியை கொண்டு தாவரவியல் பூங்கா மேம்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகளுக்கு கூடுதல் வசதிகளை உருவாக்கப்பட உள்ளது. இதில் 448 ச.மீ.பரப்பில் நிர்வாக அலுவலகத்துடன் கூடிய இயற்கை மையம், 153 ச.மீ. பரப்பில் உணவகம் மற்றும் கோடை இல்லம், 46 ச.மீட்டரில் கழிவறைக்கூடம், 34 ச.மீட்டரில் நுழைவு வாயில் கட்டப்பட உள்ளது.

**குழந்தைகள் விளையாட்டு பகுதி**

4185 ச.மீட்டரில் நடைபாதை மற்றும் சிற்றோட்டப்பாதை வசதிகள் மற்றும் இணைப்பு மையம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் தாவரவியல் பூங்காவில் அனைத்து பகுதிகளும் இணைக்கப்படும். 2017 ச.மீ. பரப்பில் நிலம் சமன் செய்தல் மற்றும் வாகன நிறுத்தம் வசதிகள் செய்யப்பட உள்ளது. இதன் மூலம் பூங்காவிற்குள் பசுமையான சுற்றுப்புறச்சூழலை உருவாக்கி சுற்றுலா பயணிகளுக்கு பொழுது போக்கு அம்சங்கள் உருவாக்கப்பட உள்ளது.

3122 ச.மீ. பரப்பில் குழந்தைகள் விளையாட்டு பகுதி அமைக்கப்பட உள்ளது. 1178 ச.மீ. பரப்பில் ஜப்பானிய தோட்டம் அமைக்கப்பட உள்ளது. 1716 ச.மீ. பரப்பில் பார்வைத்தளம் மற்றும் சிறுசெடிகள் படுகை அமைக்கப்பட உள்ளது. 4050 ச.மீ. பரப்பில் கல் மரப்பூங்கா, சிறிய புறக்கல்பாலம் மற்றும் உயரமான புல்தரை இருக்கை அமைக்கப்பட உள்ளது.

<u>அழகாக ஜொலிக்கும்</u>

தாவரவியல் பூங்காவில் மேலும் அழகு சேர்க்கும் வகையில் பல்வேறு வகையான ரோஜா, செம்பருத்தி, பொகெயன்வில்லா, கனகாம்பரம், குரோட்டன்ஸ் மற்றும் ஆண்டு முழுவதும் பூக்கக்கூடிய செடிகள் மற்றும் நிழலில் வளர்க்கும் செடிகள் போன்றவை வைக்கப்பட உள்ளது. இது இந்த பூங்காவுக்கு மேன்மேலும் அழகு சேர்க்கும்.

இந்த பணிகள் இன்னும் 8 மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பணி முடியும் தருவாயில் இந்த பூங்கா மேலும் அழகாக ஜொலிக்கும். சுற்றுலா பயணிகளை வெகுவாக கவரும். புதுச்சேரியில் பார்த்து ரசிக்கும் முக்கியமான இடங்களில் ஒன்றாக மாறும். புதுச்சேரியில் தலைசிறந்த ஒரு பொழுதுபோக்கு மையமாக இந்த தாவரவியல் பூங்கா திகழும் என்பதில் அந்த வித ஐயமும் இல்லை.

**பூசணி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



மேல்மலையனூர் அருகே உள்ள பருதிபுரம் கிராமத்தில் பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

மேல்மலையனூர் அருகே பூசணி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>பூசணி</u>

பூசணிக்காயில் பலவகை இருந்தாலும், உள்ளே மஞ்சள் நிறத்தில் இருக்கும் பூசணிக்காயில் சத்துக்கள் அதிகம். குறிப்பாக பொங்கல் பண்டிகையின் போது இந்த காய் இல்லாமல் சாமிக்கு படைக்க மாட்டார்கள்.

தற்போது பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால் மேல்மலையனூர் அருகே பருதிபுரம், நந்திபுரம், ஆணைபாளையம் மற்றும் இதன் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள விவசாயிகள் பூசணி சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதுபற்றி விவசாயி ஒருவர் கூறியதாவது:-

<u>சாகுபடி</u>

பூசணி விதைகளை செஞ்சியில் உள்ள ஒரு தனியார் விதைப் பண்ணையில் வாங்கி நட்டு தற்போது செடி வளர்ந்துள்ளது. அவ்வப்போது களை எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. பொங்கலுக்குள் அறுவடை ஆகிவிடும். அறுவடை செய்த காய்களை கோயம்மேடு காய்கறி மார்க்கெட்டுக்கு அனுப்பி விடுவோம். முன்பெல்லாம் ஒரு காய் 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனை ஆகும். ஆனால் தற்போது கிலோ கணக்கில் விற்பதால் முன்பைவிட லாபம் அதிகமாக கிடைக்கும் என்று கூறியதால் இதை சாகுபடி செய்துள்ளோம்.

<u>இவ்வாறு அவர் தெரிவித்தார்.</u>

3 மாதத்தில் அறுவடை செய்யும் இந்த பூசணி தற்போது மேல்மலையனூர் பகுதியில் மழை பொய்த்து போனதால் இருக்கின்ற நீரை பயன்படுத்தி இது போல் குறுகிய கால பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**அலங்காநல்லூர் பகுதியில் பொங்கல் பண்டிகைக்காக வெல்லம் காய்ச்சும் பணி தீவிரம்**



அலங்காநல்லுாிர்,

தைப்பொங்கலுக்கு ஒரு மாதமே உள்ள நிலையில் அலங்காநல்லூர் பகுதியில் வெல்லம் காய்ச்சும் பணி தீவிரம் அடைந்துள்ளது.

## கரும்பு அறுவடை

ஜனவரி 14–ந் தேதி தை பொங்கல் கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கலுக்காக கரும்பு, வெல்லம், மஞ்சள் கிழங்கு தீவிரமாக விற்பனையாகும். இவற்றில் அலங்காநல்லூர் பகுதியில் தயாராகும் வெல்லம் சுவை மிகுந்ததாக விளங்குவதால் வெளி மாவட்டங்களிலும் அதற்கு கிராக்கி உள்ளது.

குறிப்பாக இங்கு தயாராகும் வெல்லம் மதுரை, நாகர்கோவில், திண்டுககல், தேனி உள்ளிட்ட பல மாவட்டங்களுககும் கேரளா போன்ற வெளிமாநிலங்களுககும் அனுப்பப்படுகிறது.

இந்த பகுதியில் அலங்காநல்லூர் மட்டுமல்லாது குமாரம், வலசை, எர்ரம்பட்டி, கொண்டயம்பட்டி மற்றும் இடையபட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் கரும்பு விளைவிக்கப்படுகிறது. தற்போது இவை அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த கரும்பிலிருந்து கிரஷர் எந்திரம் மூலம் சாறு பிழியப்படுகிறது. இந்த சாற்றினை ராட்சத கொப்பரையில் வைத்து தொழிலாளர்கள் காய்ச்சுகின்றனர். வெல்லம் காய்ச்சுவதற்கான பதம் வந்ததும் அதற்காக உள்ள மரத்தினால் செய்யப்பட்ட கொள்கலனில் கொட்டுகின்றனர். ஆடு ஆறியதும் அவை உருண்டைகளாக பிடித்து வெல்லம் தயாரிக்கின்றனர்.

## விவசாயிகள் வேதனை

ஆனால் வெல்லம் தயாரித்தாலும் தங்களுக்கு போதிய லாபம் இல்லை என விவசாயிகள் கூறுகின்றனர். இது குறித்து இடையபட்டியை சேர்ந்த கரும்பு விவசாயி பரமேஸ்வரன் கூறியதாவது,

‘‘நாங்கள் பத்து மாதத்தில் அறுவடையாகும் ‘மஞ்சுளா’ ஒட்டு ரக கரும்பை பயிரிட்டோம். இதனை பயிரிடுவதற்காக விதை கரணைகள் வாங்கியது முதல், உழவுக்கூலி, நடவுப்பணி, மருந்து தெளித்தல், களை பறித்தல், தோகை களைதல்,

பட்டம் கட்டுதல் என பராமரித்தாலும் அறுவடை செய்யும் வரை ஒரு ஏககரில் கரும்பு சாகுபடி செய்வதற்கு சுமார் 1 லட்சம் ரூபாய்ககு மேல் செலவாகி விடுகிறது.

வெல்லம்

இவ்வாறு அறுவடை செய்த கரும்பில் சாறு எடுத்து உருண்டை வெல்லம் தயாரிப்பதற்காக 250 படி கரும்புச்சாறு ‘கிரஷர்’ மூலம் எடுககப்பட்டு அந்த சாற்றினை ராட்சத கொப்பரையில் சுமார் 1 மணி 30 நிமிடங்கள் வரை அடுப்பில் வைத்து காய்ச்சுகிறோம்.

நன்றாக காய்ச்சி வெல்லம் தயாரிக்கும் பக்குவத்திற்கு வந்த பின்னர் கொதிக்கும் நிலையில் உள்ள சாறு மரத்தொட்டியில் சாய்ககப்படுகிறது. சூடு ஆறியபின் உருண்டை வெல்லம் பிடித்து உலர வைககிறோம். இந்த பணிககாக திருப்பூர் மாவட்டம் உடுமலையிலிருந்து தொழிலாளர்கள் வந்துள்ளனர்.

ஒரு ஏககரில் நடவு கரும்பாக இருந்தால் 4 ஆயிரம் கிலோவும், கட்டை கரும்பாக இருந்தால் 3 ஆயிரத்து 600 கிலோவும் வெல்லம் கிடைக்கிறது. ஒரு கொப்பரைககு 90 கிலோ முதல் 100 கிலோ வரை வெல்லம் கிடைககும்.

இப்போதைய விலைவாசிப்படி ஒரு கிலோ வெல்லம் ரூபாய் 35 முதல் 40 வரை விலை போகிறது. ஒரு ஏககரில் சுமார் ரூ. 1 லட்சத்து 26 ஆயிரம் வரை வருவாய் கிடைககிறது. ஆனால் கரும்பு அறுவடை கூலி, வெல்லம் காய்ச்சும் கூலி, மிஷின், கொப்பரை வாடகை மற்றும் அதற்கான தொழிலாளர்கள், கூலி உள்பட ஒரு ஏககருககு 40 ஆயிரத்திற்கு மேல் செலவாகிறது.

விலை உயரவில்லை

இதனால் ஏற்கனவே கரும்பு உற்பத்தி செலவு, அறுவடை கூலி உள்பட ஏககர் 1–கககு 1 லட்சத்து 40 ஆயிரம் செலவாகிறது. வருமானமோ 1 லட்சத்து 26 ஆயிரம் கிடைககிறது. எனவே உழுதவன் கணககு பார்ககும் போது ஒன்றும் மிச்சமில்லை என்ற நிலை ஏற்படுகிறது.

காலப்போககில் வெல்லம் காய்ச்சும் பணியை விவசாயிகள் மறந்து மாற்று விவசாயத்திற்கு செல்லும் நிலை ஏற்படும். வெல்லம் விலை எதிர்பார்த்த வகையில் உயரவில்லை. எனவே வெல்லம் தயாரிக்கும் விவசாயிகளையும் அரசு ஊக்குவிக்கவேண்டும்'' என்றார்.

**குமரி மாவட்டத்தில் பெய்த மழையால் 1,027 குளங்கள் நிரம்பின அதிகாரி தகவல்**



நாகர்கோவில்,

குமரி மாவட்டத்தில் பெய்த மழையால் 1,027 குளங்கள் நிரம்பின என்று பொதுப்பணித்துறை அதிகாரி கூறினார்.

<u>மழை</u>

குமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக அளவு மழை பெய்துள்ளது. இதனால் அணைகளின் நீர் மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை 26.90 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 128 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பாசனத்துக்காக 150 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 123 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 150 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 60.25 அடியாக உள்ளது.

மாம்பழத்துறையாறு அணை

மாம்பழத்துறையாறு அணையின் மொத்த கொள்ளளவு 54 அடியாகும். நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 53.72 அடியாக இருந்தது. அணை வேகமாக நிரம்பி வருகிறது. இதுபற்றி பொதுப்பணித்துறை (நீர்வளம் ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் சுப்பிரமணியத்திடம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுமா? என்று கேட்ட போது அவர் கூறியதாவது :–

மாம்பழத்துறையாறு அணை நிரம்பி வருகிறது. அணை முழு கொள்ளளவை எட்டியதும், உபரிநீர் அப்படியே பாசனத்துக்காக திறந்து விடப்படும்.

1027 குளங்கள் நிரம்பின

குமரி மாவட்டத்தில் மொத்தம் 2040 குளங்கள் உள்ளன. இவற்றில் 1,027 குளங்கள் முழுமையாக நிரம்பி விட்டன. 685 குளங்கள் 75 சதவீதம் நிரம்பி உள்ளன. மற்ற குளங்களின் நீர்மட்டமும் திருப்திகரமாக உயர்ந்து வருகின்றது.

இதனால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடும் போது, மழை பெய்தால் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரில் அளவை குறைத்தும், மழை இல்லாமல் இருந்தால் அளவை உயர்த்தியும் வழங்கி வருகிறோம். அணைகள் அனைத்தும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சுப்பிரமணியம் கூறினார்.